# 2014

## நிறுவனத்தின் பின்புலம்

| | | |
|---|---|---|
| நிறுவனம் | : | இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை |
| அமைச்சு | : | இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு |
| முகவரி | : | 354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05 |
| மின்னஞ்சல் முகவரி | : | chairmannhrdc@yahoo.com |
| இணையத்தள முகவரி | : | www.nhrdc.gov.lk |
| தொலைபேசி | : | 0112595680 |
| பக்ஸ் | : | 0112595680 |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி<br>மக்கள் வங்கி |

## தலைவரின் அறிக்கை

1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை மனித வள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த சபை குறுகிய காலத்தினுள் பல்வேறுபட்ட அமைச்சின் கீழ் செயற்பட்டதுடன், 2104ம் ஆண்டில் இருந்து இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் தன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

இந்த சபை தேசிய மட்டத்தில் கொள்கைகளை உருவாக்குவதற்கு அரசுக்கு உதவுவதற்காக நிறுவப்பட்ட போதிலும், கடந்த காலத்தினுள் அதற்கு பொருத்தமான அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படாததன் காரணத்தினால் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இயலாமல் இருந்தது.

எனினும், 2014ம் ஆண்டில் அனைத்து அலுவலர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதனால், இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்திற்கான பணிகளை தெளிவாகப்புரிந்து கொண்டு, அதற்கமைவாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களை ஒழுங்குசெய்யப்பட்டதுடன், எதிர்கால ஆராய்ச்சிக்கு திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களில் இருந்து கூட்டிணைக்கப்பட்ட திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனை நிறைவேற்றுவதற்கு அவசியமான தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு திறைசேரியில் இருந்து மூலதனச் செலவாக ஒதுக்கப்பட்ட ரூபா 16.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2014ம் ஆண்டு செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டது.

இந்த திட்டத்திற்கு கருத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கும் பொழுது சட்டத்தின் 14.1ம் பந்தியில் காட்டப்பட்டுள்ள பிரதான துறைகள் பூரணப்படுத்தும் வகையில் கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டதுடன், அதன் பிரதான துறைகளாக அமைந்தது,

(அ) தொழில் வாய்ப்புகள், பயிற்சி மற்றும் கல்வி

(ஆ) விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துதல்

(இ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

(ஈ) பயனடையாக நபர்களின் குழுவிற்கு சமூகப் பாதுகாப்பை திட்டமிடுதல்

(உ) பொருளாதார மறுசீரமைப்பின் ஊடாக உரிமைகளை வழங்குதலைப் பராமரித்தல்

## 2014ம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட கருத்திட்டம்

### 1. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியச் சந்தை தொடர்பான கற்கை

இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியச் சந்தைகளில் இலங்கையின் மனித வலுவினை பயன்படுத்துதல். விசேடமாக இந்த கற்கை மூலம் பயிற்சி பெறுபவர்களின் மனித வலு தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் காணப்படும் தொழில் கேள்வி தொடர்பாக விசேட கவனம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த கற்கை உப நோக்கங்கள் பல உள்ளடக்கப்பட்டு மேற்கொள்ளப்படுவதுடன். இந்த கற்கையை மேற்கொள்வதற்க இலங்கையில் ஆலோசனை சேவைகளை வழங்கும் வரையறுக்கப்பட்ட கீறீன்டெக் மனித வள அபிவிருத்தி தனியார் நிறுவனத்தின் ஒத்துழைப்பு பெறப்படுகின்றது. அவர்களினால் தொழில்வாய்ப்புகள் உருவாகும் 3 பிரதான துறைகள் மற்றும் அவற்றின் தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது, விவசாய, தொழில்நுட்ப மற்றும் சேவைத் துறைகள் என்பவற்றில் காணப்படும் கேள்வி மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொழில்பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் பயிற்சிகளை வடிவமைத்தல் வேண்டும் என்பது தொடர்பாக தெளிவான விம்பத்தை உருவாக்கிக் கொள்வதற்கு வழிவகுத்ததுடன், தமது திறமை மற்றும் இயலுமைக்கு பொருத்தமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு தொடர்பான தரவுகளை இளைஞர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதுடன், 2014 இருந்து 2020 வரை உய்த்தறியப்பட்ட தரவுகள் காட்டப்பட்டுள்ளதுடன், இந்த தரவுகள் ஒவ்வொரு வருடமும் இற்றைப்படுத்தப்படுவதுடன், ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கும் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு இலங்கை மனித வள அபிவிருத்தி தேசிய சபை எதிர்பார்க்கின்றது.

### 2. முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் அகதிகளான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்கள் பற்றிய ஆய்வு

மூன்று தசாப்தகாலங்களாகத் தொடர்ந்த யுத்தத்தினால் தாக்கத்திற்குள்ளான வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கு சிரமத்திற்குள்ளான மக்கள் யுத்தத்தின் பின்னர் அகதிகளான மக்கள் என்பவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ‘ முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் அகதிகளாகிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் பற்றிய ஆய்வு’ 2014ம் ஆண்டு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் பிரதான நோக்கம், யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அகதிகளானவர்கள் முகம்கொடுக்கும் சமூக, பொருளாதார மற்றும் உள நிலைமைகளைக் கண்டறிதலின் ஊடாக, அவர்களை இந்த நிலமையில் இருந்து மேம்படுத்துவதற்கு அவசிய உதவிகளை வழங்குவது ஆகும்.

விசேடமாக யுத்தம் நிறைவடைந்து ஐந்து வருடங்கள் ஆகியிருந்த பொழுதிலும் இந்த மக்களின் பொருளாதார சக்தியை மேம்படுத்துவதற்கு எவ்வித முறைமைகளும்

ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பது இதற்கான காரணமாக அமைகின்றது. இதன் போது தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல், தொழில்பயிற்சி மற்றும் விவசாயப் பயிற்சி என்பவற்றை வழங்குதல், கல்விக்கான சந்தர்ப்பங்கைள அதிகரித்தல் என்பவற்றுடன் உளத்தாக்கத்திற்கு உள்ளானவர்களின் சௌக்கியத்தை சிறந்த நிலமையில் பேணுவதற்கு உகந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் தேவையை அரசிற்கும் மற்றும் தனிப்பட்ட பிரிவினருக்கும் எடுத்துக்காட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு அவசியமான விதப்புரையினை வழங்குதல் மற்றும் வழிகாட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பற்றில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3. கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் கருத்திட்டம்

இந்த கருத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிரப்பள்ளி மற்றும் பூநகரி எனும் பிரதேச செயலகப் பிரிவுகளில் அம்பாள் நகர், பரந்தன், தம்பலகாமம் மற்றும் பள்ளிக்குடா எனும் கிராம சேவைப் பிரிவுளில் உள்ள 689 குமும்பங்கள் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், இந்த கருத்திட்டத்தின் விசேட நோக்கமாக அமைந்தது தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் வருமான மட்டத்தை உயர்த்துதல், உள மற்றும் உடல் சுகாதார நிலைமை மேம்படுத்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள இளைஞர்கள் தொழில்கல்வியைப் பெற்றுக்கொள்வதை ஊக்குவித்தல், அரச பிரிவில் சேவைகளைப் பெற்றுக்கொள்வததை அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தியாவசிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதை அபிவிருத்தி செய்தல் ஆகும்.

இந்த ஆய்வின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் தேவை எது என்பதை கண்டறியப்பட்டதுடன், ஆராய்ச்சி மற்றும் உளவியல் பற்றிய நிறுவனம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் நடவடிக்கை அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு மற்றும் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் ஒத்துழைப்புடன் சேவை வழங்குதல் நிகழ்ச்சித்திட்டம், பயிர்களை விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டம், சமூகத்தை உயிர்ப்பித்தல் பற்றிய நிழக்ச்சித்திட்டம், தொழில் பயிற்சி தேவை தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கல்வி தேவையை பகிர்ந்தளித்தல் நிகழ்ச்சித்திட்ம் என்பன செயற்படுத்தப்பட்டது.

### 4. மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெண்கள் தொழிலுக்காகச் செல்லுதல் மற்றும் அதனால் ஏற்படும் சமூக விளைவுகள்

இந்த ஆய்வு மட்டக்களப்பு பெண்களின் மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலுக்கான இடம்பெயர்வும் அதன் பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களுக்கான காரணங்களை பரீட்சித்துப் பார்ப்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். அத்துடன், இடம்பெயர்வு காரணமாக ஏற்படும் மறைத் தாக்கங்களுக்கு அனுகூலமான தீர்வுகளை பரிந்துரைப்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். அத்துடன், இடப்பெயர்வின் தக்கத்தைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய

தீர்வு யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு ஆய்வவுகளின் ஊடாக முயற்சி எடுக்கப்பட்டதுடன். இந்த ஆய்வின் பிரதான நோக்கமாக பெண்கள் தொழிலுக்காக இடம்பெயரும் பொழுது இடம்பெறும் பணிகளின் மாற்றத்தினை பகுப்பாய்வு செய்தல் மற்றும் மட்டக்களப்பு குடும்பங்களில் அதன் தாக்கம் என்பன அமைந்துள்ளது.

## 5. முழுமைப் படைப்பு கோட்பாட்டின் ஊடாக குடும்பங்களில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தல்

முழுமைப் படைப்புக் கோட்பாட்டின் ஊடாக குடும்பங்களில் முழுமையாக அபிவிருத்தியை ஏற்படுத்தும் கருத்திட்டம் பல கட்டங்களாக செயற்படுத்தப்பட்டது. அதன் முதலாவது கட்டம் குடும்பத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய விதிகளை அடையாளம் காணுதல் ஆகும். அந்த நடவடிக்கைகளுக்கான பயிற்சிப் பட்டறைகள் இரண்டு தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இதற்காக செயலமர்வுகள் பல பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற வளநபர்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டதுடன், கிராம அலுவலர் மட்டத்தில் இருந்து ஜனாதிபதி அலுவலகம் வரை மின்னிலத்திரனியல் சபையின் கருத்துகளைக் கருத்திட்டத்திற்காக கேட்டுக்கொள்வதற்கு முடிந்தமை இதன் விசேட அம்சமாகும். இந்த செலயமர்வுளில் பல்வேறு துறைகள் தொடர்பாக பல்வேறுபட்ட குழுக்களில் கலந்துரையாடப்பட்டதுடன், அக்குழுக்களினால் குடும்பத்தை அபிவிருத்தி செய்வதற்கான விதிமுறைகள் தங்கள் குழுவிற்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்டதுடன், பல்வேறுபட்ட கற்கைகள் மற்றும் செயலமர்வுகள் மூலம் தயாரிக்கப்பட்ட குடும்பங்களை அபிவிருத்தி செய்வதற்கான விதிகளை உள்ளடக்கி 'சொதுரு கதல்ல' எனும் பெயரில் சிறிய புத்தகம் தயாரிக்கப்பட்டது. விதிகள் உள்ளடங்கிய புத்தகம் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் தன்னார்வ சேவையார்கள் ஊடாக குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதர்க்கான நடவடிக்கைகள் பிரதேச செயலாளரின் தலைமையின் கீழ் அனைத்து உத்தியோகத்தர்களினதும் அனைத்து குடும்பங்களினதும் பங்களிப்புடன் கிராமத்தின் அறிவூட்டல் செயலமர்வின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

## 6. தயட கிருள நிகழ்ச்சித்திட்டம்

<u>நேர்மறைச் சிந்தனை மாற்றத்தின் ஊடாக சிறந்த அரச சேவை</u>

2015ம் ஆண்டு தயட கிருள நிகழ்ச்சிக்கு சமாந்தரமாக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்பட்ட பல நிகழ்ச்சிகளில் ஒரு நிகழ்ச்சத்திட்டமாக அரச சேவை பயணத்திற்கு மக்கள் சேவையாளர்களின் எண்ணத்தை நேர்மறையாக மாற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களைக் கேந்திரப்படுத்தி நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டள்ளது. மக்கள் அபிமான சேவையை வழங்குவதற்கு ஏற்றவகையில் அரச சேவையாளர்களின் எண்ணத்தை நேர்மறைச் சிந்தனையாக மாற்றுவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

2014 ஒகஸ்ட் 18ம் திகதி முதலாவது செயலமர்வு காலி வக்வல்ல முகாமைத்துவ அபிவிருத்தி மத்தியநிலையத்திலும் இரண்டாவது செயலமர்வு ஓக்ஸ்ட் 28ம் திகதி இரத்தினபுரி மாகாண சபை கேட்போர் கூடத்திலும் மூன்றாது செயலமர்வு செப்டெம்பர் 19ம் திகதி ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திலும் நான்காவது செயலமர்வு ஒக்டோபர் 10ம் திகதி மாத்தறை மாவட்டத்திலும் ஐந்தாவது செயலமர்வு காலி மாவட்டத்திலும் நடாத்தப்பட்டது.

## 7. இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினுள் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்தல்

16 வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் ஆரம்பத்தில் இருந்து இன்று வரை மக்களின் பணத்தில் பராமரிக்கப்படுவதனாலும், பொருளாதார வளர்ச்சிக்கு மனிதவள அபிவிருத்திக்கு முக்கிய காரணியாக விளங்குவதனாலும், 2014ம் ஆண்டு சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தித்திறன் மற்றும் தர மேம்படுத்தல் நியமத்தை இந்த சபையினுள் பிரயோகிப்பதன் மூலம் சிறந்த மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அவசியமான கொள்கையை உருவாக்குவதற்கு அரசுக்கு அவசியமான விதப்புரையினை வழங்குவதற்கு ஏற்றவகையில் நிறுவனத்தை மேம்படுத்துவதற்கு இந்த கருத்திட்டத்தின் திரட்டிய நோக்கமாகும்.

எங்கள் சபை 14.11.2014ம் திகதி ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டதுடன் அது 13.11.2017 வரை பயனுறுதி பெறும். உற்பத்தித்திறன் மற்றும் தரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்தை இந்த நிறுவனத்தினுள் செயற்படுத்தவதன் ஊடாக கிடைக்கப்பெற்றுள்ள பெறுபேறுகளை கருத்தில்கொள்ளும் பொழுது நிறுவனத்தின் முழு செயற்பாடுகளும் தர முகாமைத்துவ முறைமைக்கு ஏற்றவகையில் பணியாற்றுவதற்கு முடிந்தமையினால், நிறுவனத்தின் அனைத்து ஆவணங்களையும் நிர்வாகத்தின் கீழ் வைத்திருப்பதற்கு முடிந்தது. இதன்படி நிறுவனத்தினுள் பராமரிக்கப்படும் கடிதங்கள் மற்றும் ஆவணங்கள், மாதிரிப் படிவங்கள் என்பவற்றை இலகுவில் கண்டறிய முடிந்ததனால், நாளாந்த பணிகளை மிகச்சிறப்பாககவும் ஒழுங்காகவும் இலகுவாகும் செய்ய முடிந்ததனால், நிறுவனத்தின் முழு நடவடிக்கைகளையும் சரியான முறையில், வினைத்திறனுடள், மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் செய்வதற்கான வழிமுறைகளை உருகாக்கிக்கொடுத்ததன் ஊடாக இந்த ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன் ஊடாக இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைக்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது..

## 8. நிறுவனத்தினுள் மின்னலத்திரனியல் ஆவண முறைமையை செயற்படுத்துதல்

இலங்கை அரச நிறுவனங்கள் தங்கள் கடமைகளையாற்றும் பொழுது கடதாசி பதிவேடுகளை பயன்படுத்துவதுடன், தொடர்பாடலுக்கு வழமையான கடித முறை பயன்படுத்தப்படுகின்றது. எனினும் சில அரச நிறுவனங்களின் ஊடாக பதிவேடு முகாமைத்துவ முறைமை மற்றும் மின்னஞ்சல் முறைமை பயன்படுத்தப்பட்டு மின்னிலத்திரனில் ஆவணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அரச No /SB/01/13 ம் சுற்றுநிருபத்திற்கு அமைவாக எங்கள் நிறுவனத்திலும் மின்னிலத்திரனியல் ஆவண முகாமைத்துவ முறைமை தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. இந்த மின்னிலத்திரனியல் முறைமையினுள் சாதாரண செயற்பாடாக word documents ஆவணங்களை பயன்படுத்துவதற்கு இயலுமான வகையில் செய்யப்பட்டள்ளது. பின்னா் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில் பல்வேறு ஆவணங்கள் மின்னிலத்திரனியல் ஆவணமாக மாற்றப்பட்டு டிஜிடைஸ் (Digitize) ஆவணமாக பராமரிக்கப்படுகின்றது.

## 9. மனிதவள அபிவிருத்தி தொடர்பான தகவல்களை வங்கியில் பேணுதல்

1997ம் ஆண்ட 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிரத்திச் சட்டத்தின் கீழ் மனிதவள அபிவிருத்தி மற்றும் அது தொடர்பான துறைகள் தொடாபான தகவல்கள் அடங்கிய தரவு வங்கியொன்றைப் நிறுவிப் பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எங்களினால் தொழில் கற்கைநெறிகளைப் பயில விரும்பும் இளைஞர்களின் மற்றும் தொழில் தேடும் இளைஞர்களின் தகவல்கள் அடங்கிய தரவு முறையொன்று www.nhrdc.gov.lk/index.php எனும் இணையத்தளத்தில் பேணப்படுகின்றது. இந்த இணையச் சேவை மூலம் தொழில் வழங்கும் நிறுவங்களுக்கு மற்றும் தொழில் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

விஜய விக்கிரமரத்தன
தலைவர்

## பொருளடக்கம்

பக்கம்

1. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு ....................................................................1

2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு ..................4

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம் .....7

4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி .....................................................................................................8

5. நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டம் ..........................................................................10

5.1 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தை தொடர்பான கற்கை ...................................10

5.2 முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் அகதிகளான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்கள் பற்றிய ஆய்வு .......................................................................................12

5.3 கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் 04 தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் 04 கிராம சேவைப் பிரிவுகளில் சமூக, பொருளாதார, கலாச்சரா மற்று் அரசியல் சவால்களுக்கு முகம் கொடுக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் கருத்திட்டம். ............................................................................14

5.4 மத்திய கிழக்கு நாடுகள் பெண்கள் தொழிலுக்காகச் செல்லுதல் மற்றும் அதனால் ஏற்படும் சமூக விளைவுகள்.........................................................................................................17

5.5 முழுமைப் படைப்பு கோட்பாட்டின் ஊடாக குடும்பங்களில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தல்...........................................................................................................19

5.6. தயட கிருள நிகழ்ச்சித்திட்டம்.....................................................................................24

5.7 இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினுள் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்தல் ..........................................................................................................25

5.8 நிறுவனத்தினுள் மின்னலத்திரனியல் ஆவண முறைமையை செயற்படுத்துதல் .......................32

5.9 மனிதவள அபிவிருத்தி தொடர்பான தகவல்களை வங்கியில் பேணுதல்................................33

5.10 செய்தித்தாள்..........................................................................................................33

6. 31.12.2014ம் திகதியன்று நிதிக் கூற்று.......................................................................34

7. 2014 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று.................36

8. 2014 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று ......................................................................................................37

9. 31 டிசம்பர் 2014ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றுதிரட்டிய காசுப் பாச்சல் கூற்று ...38

10. குறிப்புகள் .............................................................................................................40

11.குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் ருக்கம், விளக்கக் குறிப்புகள் ................48

12. கணக்காய்வு அறிக்கை மற்றும் பதில்...........................................................................51

# 1. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை, இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் முக்கிய பணிகளை ஆற்றுவதற்காக 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மனிதவள அபிவிருத்தி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குதல், மனிதவள அபிவிருத்திக்காக கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல், செயற்படுத்துதற்கு உதவிகளை வழங்குதல் போன்ற முக்கிய பணிகளின் பொறுப்பினை வகிக்கின்றது. அதன் பிரதான நோக்கமாக இருப்பது உரிய அமைச்சருக்கும், அரசுக்கும் மனிதவள அபிவிருத்தி தொடர்பான விதப்புரைகளை வழங்கும் உயர் மட்ட நிறுவனமாக செயற்படுதல் ஆகும்.

## 1.2 நிறுவன அறிமுகம்

தேசிய மட்டத்திலான ஆலோசனை சபையாக 1987ம் ஆண்டு ஜூன் மாதம் 05ம் திகதி இலங்கை தேசிய மனிதவள சபை ஆரம்பமானது, இளைஞர் விவகார அமைச்சின் ஓர் அலகாகவாகும். அதன் பின்னர் 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் ஊடாக சுயாதீனமாக தொழில்முயற்சியாண்மை சபையாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் நிறுவப்பட்டது. அன்றிலிருந்து குறுகிய காலத்தினுள், அதாவது 2000ம் ஆண்டு இந்த நிறுவுனம் கைத்தொழில் கல்வி மற்றும் தொழில் அமைச்சின் கீழ் சாட்டப்பட்டதுடன், 2001ம் ஆண்டு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை கல்வி மற்றும் காலாச்சார அமைச்சின் கீழ் சாட்டப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் அரசு மாற்றமடைந்ததும் இந்த நிறுவனம் திறன் அபிவிருத்தி, தொழில் மற்றும் கைத்தொழில் பயிற்சி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. இவ்வாறு குறுகிய காலத்தினுள் பல்வேறுபட்ட அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த இந்த நிறுவனம் தற்போது கொள்கைத் திட்டமிடல், பொருளாதார நடவடிக்கை, சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

## 1.3 தொலைநோக்கு

"தொலைநோக்குடைய இளைஞர்கள் மற்றும் திறனுடைய மனித வளம் மிக்க தேசியம"

## 1.4 செயற்பணி

மனிதவளத்திற்கான வினைத்திறன் மிக்க கொள்கை மற்றும் உபாயமார்க்கங்களை அபிவிருத்தி செய்தல், செயற்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் வசதிகளை வழங்குவதன் ஊடாக இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றுவதற்கு பங்களிப்பு செய்தல்.

## 1.5 நோக்கம்

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் நோக்கமான அரசுக்கு மனிதவளத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குவதற்கான நிறுவனச் சட்டகத்தை உருவாக்குதல். மனிதவள அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத் திட்டம், கொள்கை மீளாய்வு மற்றும் மனிதவள பிரிவின் வளர்ச்சி போன்ற பிரிவுகள் தொடர்பாக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை பொறுப்பினை வகிக்கும். சபையின் சட்டத்திறகு அமைவாக சபையின் பணிகள் கீழ்வருமாறு அமைகின்றது.

1. (அ) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
   (ஆ) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்
   (இ) வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல்
   (ஈ) பாதிக்கப்பட்ட குடும்பக் குழுக்களுக்கு சமூகப் பாதுகாப்பைத் திட்டமிடுதல் மற்றும்
   (உ) பொருளாதார மீள்கட்டமைப்பு மூலம் உரிமைகளைப் பொற்றுக்கொடுத்தல் தொடர்பாக அல்லது மனித வளத் தொகுதியை நியாயப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் உட்பட தேசிய மனிதவள கொள்கையின் அனைத்துப் பிரிவுகள் தொடர்பாகவும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.
2. தேசிய கொள்கைக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அரசுக்கு சமர்ப்பிப்பதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு விதப்புரையை வழங்குதல்.
3. தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் செயற்படுத்தப்படும் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்தல் மற்றும் பரீசீலித்துப்பார்த்தல் மற்றும் தேவையாயின், அக்கொள்கைகளுக்கு திட்டங்களுக்கு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு செய்யவேண்டிய மாற்றங்களை அமைச்சருக்கு விதப்புரை செய்தல்.
4. அரசினால் அனுமதியளிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுவமை ஆராய்ந்து பார்த்தல்.
5. இந்த சட்டத்தின் உபஅட்டவணையில் குறிப்பிடப்பட்ட யாதேனும் வியம் தொடர்பாக யாதேனும் கருத்திட்டங்களை செயற்படுத்தல். அவ்வாறு இருந்த போதிலும் கருத்திட்டம் வேறுயாதேனும் அமைச்சருக்கு சாட்டப்பட்ட யாதேனும் விடயம் தொடர்பாக இருக்குமாயின், அதனை செயற்படுத்தல் என்பது அந்த அமைச்சரின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும்
6. தேசிய நோக்கத்திற்கு அமைவாக மனிதவளத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவசியம் எனக் கருதும் நன்மைகள் அல்லது பின்னர் பலன்தரக்கூடியவை என அனைத்தையும் செயற்படுத்தல்.

## 1.6 சபைக்கு உள்ள அதிகாரங்கள்

1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 (2)(1)ம் உபபந்தியின் கீழ் சபைக்குரிய அதிகாரங்கள் இவையாகும்.

(அ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான ஆய்வுகள், விசாரணைகள், கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) மனிதவள அபிவிருத்திக்குரிய விடயங்கள் தொடர்பாக நிபுணர்களின், தொழில்சார்ந்தவர்களின் அல்லது மக்களின் கருத்தினை அறிந்து கொள்வதற்கு வெளிப்படையாக அல்லது தனிப்பட்ட ரீதியில் விடங்களை கேட்டறிதல்.

(இ) சபையினால் நிறைவேற்றப்படும் பணிகளுக்கு சமமான பணிகளை இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புகளைப் பேணுதல்.

(ஈ) இந்த சட்டத்தின் கீழ் சபையின் பணிகளை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்து ஒப்பந்தகங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு வருதல் மற்றும் அவற்றினை நிறைவேற்றுதல்.

(உ) இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட நபர்களின் ஊடாக மனிதவள அபிவிருத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(ஊ) மனிதவள அபிவிருத்தி மற்றும் அதற்குரிய விடயங்கள் தொடர்பான தகவல் தரவு வங்கியொன்றினை நிறுவி அதனைப் பேணுதல்.

(எ) ஏதேனும் வங்கி அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு கணக்குகளை உருவாக்கி அவற்றைப் பேணுதல்.

(ஏ) அசையும் மற்றும் அசையா இருவகை நன்கொடை மற்றும் நிவாரணங்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.

(ஐ) மனித வள அபிவிருத்தியில் பல்வேறுபட்ட பிரிவுகளில் திறன் நிபுணத்துவ ஒதுக்கொன்றினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தினைக் கொண்டு சபை அலுவலர்களின் திறமையை மேம்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஒ) சபையின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அவசியமான குழு நிபுணத்துவக் குழு மற்றும் ஆலோசனைச் சபை என்பவற்றை நிறுவுதல்.

(ஓ) அமைச்சுகளில், அரச திணைக்களங்களில், அரச கூட்டுத்தாபனங்களில், சட்டபூர்வ சபைகளில், மாகாண சபைகளில், உள்ளூராட்சி நிறுவனங்களில் மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் தரவுகள் உட்பட சபையினால் அவசியம் எனக் கருதப்படும் தகவல்களை கோருதல் மற்றும் அவற்றினை பெற்றுக்கொள்ளுதல்.

(ஔ) சபையின் பணி அதிகாரங்கள் மற்றும் பணியினை நிறைவேற்றுதல் என்பவற்றை செயற்படுத்துதல் மற்றும் செயற்படுத்துவதற்கு அவசியம் என எண்ணும் நன்மையானது அல்லது பின்னர் பலன்தரக்கூடியது எனும் அனைத்தையும் செயற்படுத்தல்.

## 2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் இந்த சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவப்பட்ட தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் என்பவர்கள் உள்ளடங்களாக 20 நபர்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் 15 பேர் உத்தியோகபூர்வ அதிகாரத்துடனும் உரிய நிறுவனங்களில் இருந்து 5 பேராகவும் நியமிக்கப்படுவர். இதைவிட உரிய துறையில் முன்னனுபவம் மற்றும் திறமை என்வற்றை கருத்தில் கொண்டு 5பேர் நியமிக்கப்படுவதுடன், இதில் இருவர் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவராவர். சபை அங்கத்தவர்களில் ஒருவரை நிறைவேற்றுத் தலைவராக பெயரிடுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதான நிறைவேற்று அலுவலர் சபையின் தலைவராவார். சுபை 31.12.2014ம் திகதி 19 அங்கத்தவர்களை கொண்டமைந்திருந்தது.

2014ம் ஆண்டு சபையின் பணிப்பாளர் சபை கீழ்வரும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

**சட்டத்தின் 3(1)(அ) வில் இருந்து (வ) வரையிலான பந்தியின் கீழ் நியமனங்கள்**

1. திரு விஜய விக்ரமரத்ன - தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை
2. திரு. பி.விஜயரத்ன - செயலாளர், இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு
3. கலாநிதி திரு சுனில் ஜயந்த நவரத்ன - செயலாளர், உயர் கல்வி அமைச்சு.
4. திரு அனுர திசாநாயக்க - செயலாளர், கல்வி அமைச்சு
5. டாக்டர். திரு. வை.டி. நிஹால் ஜயதிலக- செயலாளர், சுகாதார அமைச்சு
6. திருமதி தாரா விஜேதிலக - செயலாளர், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
7. திரு.டபில்யூ.ஜே.எல்.யூ.ஜயவீர - செயலாளர், தொழிலாளர் தொடர்புகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் அமைச்சு
8. திரு பீ.பி.அபேகோன் -செயலாளர்,அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
9. திரு அனுர சிறிவர்தன அவர்கள் -செயலாளர், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
10. திரு.ஆர்.எம்.டி.பி. மீகஸ்முல்ல - செயலாளர், விவசாய அமைச்சு
11. கலாநிதி திரு தயந்த எஸ். விஜேசேகர - தலைவர், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு
12. கலாநிதி திரு ரசிக பெரேரா - பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு
13. பேராசிரியர் திரு லக்ஷ்மன் ஜயதிலக - தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
14. பேராசிரியர் திருமதி கிருஷானிகா ஹிருமுரேகம -தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
15. திரு சந்தன அருணதேவ - தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி வழங்கல் அதிகாரசபை
16. திரு ஏ தயாரத்ன - மேலதிக பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம்

**சட்டத்தின் 3(2)(ஐ) பந்தியின் கீழ் நியமனங்கள்**

1. திரு பியதாச பத்திரண வீரசிங்க - சரசி, ரதம்பொல, ஊருகமுவ
2. திருமதி லலிதா விதானாராச்சி - இல 377, தங்கல்ல வீதி, மத்தவத்த, மாத்தறை
3. திரு ஆர் விக்ரமசிங்க - 36 C , விகார மாவத்தை, பப்பிலியான

கீழ்வரும் பெயர்களை உடைய அங்கத்தவர்கள் 12.08.2014ம் திகதி வியத்திற்கு பொறுப்பான அமைச்சரினால், நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்டள்ளனர்.


1. திரு. விஜய விக்ரமரத்தன – தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை
2. திருமதி லலிதா விதானாரச்சி
3. திரு பியதாச பத்திரண வீரசிங்க
4. திரு. ஆர் விக்ரமசிங்க

அதேபோல் விவசாய அமைச்சின் செயலாளர் திரு.டபில்யூ.சகலசூரியவிற்குப் பதிலாக திரு ஆர்.எம்,டி.பி.மீகஸ்முல்ல அவர்களும், கல்வி அமைச்சின் செயலாளர் திரு.கோதாபய ஜயரத்ன அவர்களுக்கு பதிலாக திரு. அனுர திசாநாயக்க அவர்களும், இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு.கே.ஏ.திலகரத்ன அவர்களுக்குப் பதிலாக திரு பி.விஜயரத்ன அவர்களும், மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழல்கல்வி சபையின் தலைவர் திரு தயந்த விஜேசேகர அவர்களுக்கு பதிலாக பேராசிரியர் சந்ரா அம்புல்தெனிய அவர்களும் நியமிக்கப்பட்டனர்.

**2014ம் ஆண்டு இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் நிர்வாகக் குழுக் கூட்டம் மற்றும் நடத்தப்பட்ட தினங்கள் மற்றும் பங்குபற்றிய அங்கத்தவர்களின் விபரங்கள்**

| தொடர் இலக்கம் | நிர்வாக சபையின் அங்கத்தவர்களின் பெயர் | 2014.01.24 | 2014.03.28 | 2014.05.30 | 2014.08.01 | 2014.10.17 | 2014.12.12 |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை | √ | √ | √ | √ | √ | √ |
| 02. | செயலாளர்,இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு | - | - | - | - | - | - |
| 03. | செயலாளர், உயர் கல்வி அமைச்சு | - | - | - | - | - | - |
| 04. | செயலாளர், கல்வி அமைச்சு | - | - | - | - | - | - |
| 05. | செயலாளர், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | - | - | - | - | - | - |
| 06. | செயலாளர், தொழிலாளர் தொடர்புகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் அமைச்சு | - | √ | - | - | - | - |
| 07. | செயலாளர், அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | - | - | - | - | - | - |
| 08. | செயலாளர், சுகாதார அமைச்சு | - | - | - | √ | - | - |
| 09. | திரு அனுர சிறிவர்தன அவர்கள் செயலாளர், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு | | - | - | √ | - | - |
| 10. | செயலாளர், விவசாய அமைச்சு | √ | √ | - | - | √ | √ |
| 11. | தலைவர், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு | √ | √ | - | √ | √ | √ |
| 12. | பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு | - | √ | √ | - | √ | √ |
| 13. | தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு | √ | √ | √ | √ | √ | √ |
| 14. | தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | - | √ | √ | √ | - | - |
| 15. | தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி வழங்கல் அதிகாரசபை | - | - | - | - | - | - |
| 16. | செயலாளர்,நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு ( பிரதிநிதி) | √ | √ | √ | - | √ | √ |
| 17. | நியமிக்கப்பட்ட அங்கத்தவர் - திருமதி லலிதா விதானாராச்சி | √ | √ | - | √ | - | √ |
| 18. | நியமிக்கப்பட்ட அங்கத்தவர் - திரு பியதாச பத்திரண வீரசிங்க | √ | √ | √ | √ | √ | √ |
| 19· | நியமிக்கப்பட்ட அங்கத்தவர் - திரு ஆர் விக்ரமசிங்க | √ | √ | - | √ | √ | √ |
| | | **08** | **11** | **06** | **09** | **08** | **09** |

## 03. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம்



## 4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி

| பதவிப் பெயர் | அனுமதி வழங்கப்பட்ட பதவியணி | 31.12.2014 திகதியன்று சேவையில் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை | 31.12.2014 திகதியன்று வெற்றிடம் | பெயர் |
|---|---|---|---|---|
| தலைவர் | 01 | 01 | - | திரு விஜய விக்ரமரத்ன |
| பணிப்பாளர் | 01 | 01 | - | திரு கே ஏ லலிததீர |
| உதவிப் பணிப்பாளர் | 03 | 03 | - | திரு எச் தியாகசீலன்<br>திரு யு.எஸ்.டி. விதானகே<br>திருமதி ஜே.ஏ.சி.ஜி.ஜயசிங்க |
| சபைத் தலைவர் /சட்ட அலுவலர் | 01 | 01 | - | செல்வி ஜி.ஜி.கயுனி உப்பலா |
| ஆராய்ச்சி அலுவலர் | 04 | 03 | 01 | திருமதி ஆர்.எம்.ஏ.யு.கே. இரத்னாயக்க<br>திருமதி ஏ.எச்.டி.சி. பெரேரா<br>திரு டி செந்தில்நாதன் |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - | திருமதி சாமினி காரியவாசம் |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | - | 01 | - |
| அபிவிருத்தி அலுவலர் | 04 | 04 | - | திருமதி பீ.ஈ.எஸ். சேனாரத்ன த சில்வா<br>திரு ஆர்.டி.சி.எஸ் ராஜபக்ச<br>திரு.கே.பி.ஜி.பெரேரா<br>செல்வி.சீ.குணசிங்க |
| தலைவரின் தனிப்பட்ட உதவியாளர் | 01 | 01 | - | செல்வி நாளிகா இரத்நாயக்க |
| முகாமைத்துவ உதவியாளர் | 08 | 06 | 02 | திரு.சி.ஆர்.மத்தகே<br>செல்வி.எம்.ஜி.என்.தில்ஹாரி<br>திரு.டபில்யூ.எம்.லக்சித ரஜித்<br>செல்வி கே சி முத்துமால<br>செல்வி ஜி.ஜி.எம்.சத்தாமங்கள<br>செல்வி. ஆஷா சுரேணி எதிரிசிங்க |
| சாரதி | 04 | 04 | - | திரு.ஜி.எம். பின்னதுாவ<br>திரு.டபில்யூ.எச்.ஈ. ஜயரத்ன<br>திரு.டபில்யூ.டெரன்ஸ் பியல்<br>திரு டி.எச.டபல்யூ. அசங்க லக்மால் |
| அலுவலக உதவியாளர் | 04 | 03 | 01 | திரு என்.ஜி.நதுன் மதுரங்க<br>திரு.டபில்யூ.ஆர்.ஏ பிரின்ஸ் கிரான்வில்<br>செல்வி ஏ நயனா பிரியதர்சனி |
| **மொத்த எண்ணிக்கை** | **33** | **28** | **05** | |

அனுமதியளிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட கீழ்வரும் வெற்றிடங்களுக்கு பொத்தமான ஊமியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அதேபோல் முகாமைத்தவச் சுற்றுநிருபத்தின் 30ம் ஏற்பாட்டுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு பிரமாணம் திருத்தப்பட்டு 28.09.2014ம் திகதி அனுமதி பெறப்பட்டது.

**புதிய ஆட்சேர்ப்பு**

| பெயர் | பதவி | ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதி |
|---|---|---|
| செல்வி. கே.சி.குணசிங்க | அபிவிருத்தி அலுவலர் | 2014.01.01 |
| திரு.டபில்யூ.டெரன்ஸ் பியல் | சாரதி | 2014.01.01 |
| திரு.என்.கே.மிரண்டா | பணிப்பாளர் | 2014.06.09 |
| திரு.டி.செந்தில்நாதன் | ஆராய்ச்சி அலுவலர் | 2014.06.19 |
| செல்வி.கே.சி.முத்துமால | முகாமைத்துவ அலுவலர் | 2014.06.19 |
| செல்வி ஜி.ஜி.எம்.சத்தாமங்கள | முகாமைத்துவ அலுவலர் | 2014.06.19 |
| செல்வி. ஆஷா சுரேணி எதிரிசிங்க | முகாமைத்துவ அலுவலர் | 2014.06.19 |
| திரு கே ஏ லலிததீர | பணிப்பாளர் | 2014.09.16 |
| திரு டி.எச.டபல்யூ. அசங்க லக்மால் | பதில் சாரதி | 2014.09.22 |

**ஊழியர்கள் சேவையிலிருந்து விலகல்**

| பெயர் | பதவி | சேவையிலிருந்து விலகிய தினம் |
|---|---|---|
| செல்வி ஜி.எச்.ஜி.சி.பிரியதர்சனி | முகாமைத்துவ அலுவலர் | 2014.01.04 |
| திரு டி.எம்.எஸ்.என.பி.ஜயதிலக | ஆராய்ச்சி அலுவலர் | 2014.01.31 |
| திருமதி சீ.கே.ஜயசேகர | முகாமைத்துவ அலுவலர் | 2014.01.10 |
| திருமதி.கே.ஏ.எம்.தமயந்தி | முகாமைத்துவ அலுவலர் | 2014.04.04 |
| திரு என்.ஜி.இசான் ரெக்ஸ்மன்ட் | சாரதி | 2014.06.30 |
| செல்வி எச்.டி.ஏ.ஏ.ஹதுரசிங்க | ஆராய்ச்சி அலுவலர் | 2014.07.28 |
| திரு.என்.கே.மிரண்டா | பணிப்பாளர் | 2014.08.10 |
| திருமதி.கே.எஸ்.என் பெரேரா | முகாமைத்துவ அலுவலர் | 2014.09.25 |
| திரு புத்திக்க விஜேசிங்க | அலுவலக உதவியாளர் | 2014.09.25 |

# 5. நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டம்

## 5.1 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தை தொடர்பான கற்கை

இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைகளுக்கு இலங்கை மனித உழைப்பை சரியான முறையில் வழங்குதல் ஆகும். விசேடமாக இந்தக் கற்கையின் மூலம் பயிற்சியாளர்களுக்கு உரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் காணப்படும் தொழில் கேள்வி மற்றும் வழங்கல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது. இந்த கற்கை துணை நோக்கங்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது.

அவை,

I. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தையில் காணப்படும் தொழில்வாய்ப்புகள் மற்றும் எதிர்காலத்தில் கட்டியெழுப்பப்படும் தொழில்வாய்ப்பகளை கண்டறிதல் மற்றும் அதற்கு பொருத்தமான வகையில் இலங்கையினுள் உழைப்பாளர்களை கட்டியெழுப்புதல். ( தகைமை வாய்ந்த பயிற்சியாளர்கள்)

II. தற்போது வெளிநாட்டு சந்தையில் மனித உழைப்பாக வழங்களப்பட்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை, அவர்கள் ஈடுப:ட் தொழில் மற்றும் நாடுகளைக் கண்டறிதல்.

III. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கேள்வியுள்ள தொழில்வாய்ப்புகளைக் கண்டறிதல்.

IV. எங்கள் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள பயிற்சி நிறுவனங்களின் ஊமாக வழங்கப்படும் பயிற்சிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் அமைந்துள்ளதா எனக் கண்டறிதல்.

V. எதிர்வரும் ஐந்து ஆண்டுகளினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தையின் தொழில்வாய்ப்புகள் காணப்படும் பிரிவுகள் மற்றும் நாடுகளை அடையாளம் காணுதல்.

VI. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் காணப்படும் கேள்விக்கு ஏற்றவகையிலான பயிற்சி மற்றும் திறமை நிறைந்த உழைப்பாளர்களை உருவாக்குவதற்கு கல்வித்துறையினுள், சமூக ரீதியாக, அரசியல் ரீதியாக மற்றும் காலாச்சார ரீதியாக மாற்றம் ஏற்பட வேண்டிய இடங்களைக் கண்டறிதல்.

உள்நாட்டில் இருக்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் மாற்றம்பெற வேண்டிய முறை, உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் காணப்படும் கேள்வி மற்றும் வழங்கல் என்பவற்றுக்கிடையே காணப்படும் வேறுபட்டை கண்டறிந்து திட்டத்தினை வரைதல்.

இந்த விடயம் தொடர்பாக கவனத்தைச் செலுத்தி, இந்தக் கற்கையை மேற்கொள்வதற்காக இலங்கையினுள் ஆலோசனை வழங்கும் "Green Tech Human Resource Development (Pvt) Ltd" நிறுவனத்தின் ஒத்துழைப்பு பெறப்பட்டது. அவர்களினால் இந்த கற்கை ஏறத்தாள 6 மாத காலமாக மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கற்கையின் பின்னர் தொழில்வாய்பு ஏற்படும் 3 துறைகளுக்கு அவசியமான தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டள்ளது. அவை,

1. விவசாயம்
2. கைத்தொழில்
3. சேவை

எனும் பிரிவுகளில் தற்போது காணப்படும் தொழில் தேவை / வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்கு தொழில் பயிற்சி நிறுவனங்கள், வேறு பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் எவ்வாறு மாற்றம் அடைய வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக தெளிவான விம்பத்தைக் கட்டியெழுப்புவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதுமாத்திரமின்றி தமது திறமைக்கு மற்றும் இயலுமைக்கு பொருத்தமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள் தொடர்பான தரவுகளை இளைஞர்களுக்கு வழங்குவதற்கு இதன் மூலம் முடியுமாகும். இந்த ஆய்வின் இறுதி அறிக்கை 2014 டிசம்பர் மாதம் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இங்கு 2014 இருந்து 2020 வரையிலான காலப்பகுதிக்கு கற்பனை செய்யப்பட்ட தரவுகள் காட்டப்பட்டுள்ளதுடன், இங்கு ஒவ்வொரு வருடமும் தரவுகள் இற்றைப்படுத்தப்படுவதன் மூலம் ஒவ்வொரு எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை எதிர்பார்க்கின்றது.

## 5.2 முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் அகதிகளான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்கள் பற்றிய ஆய்வு

மூன்று தசாப்தகாலங்களாகத் தொடர்ந்த யுத்தத்தினால் தாக்கத்திற்குள்ளான வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கு சிரமத்திற்குள்ளான மக்கள் யுத்தத்தின் பின்னர் அகதிகளான மக்கள் என்பவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ' முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் அகதிகளாகிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் பற்றிய ஆய்வு' 2014ம் ஆண்டு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் பிரதான நோக்கம், யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அகதிகளானவர்கள் முகம்கொடுக்கும் சமூக, பொருளாதார மற்றும் உள நிலைமைகளைக் கண்டறிதலின் ஊடாக, அவர்களை இந்த நிலமையில் இருந்து மேம்படுத்துவதற்கு அவசிய உதவிகளை வழங்குவது ஆகும். விசேடமாக யுத்தம் நிறைவடைந்து ஐந்து வருடங்கள் ஆகியிருந்த பொழுதிலும் இந்த மக்களின் பொருளாதார சக்தியை மேம்படுத்துவதற்கு எவ்வித முறைமைகளும் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பது இதற்கான காரணமாக அமைகின்றது. இதன் போது தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல், தொழில்பயிற்சி மற்றும் விவசாயப் பயிற்சி என்பவற்றை வழங்குதல், கல்விக்கான சந்தர்ப்பங்கைள அதிகரித்தல் என்பவற்றுடன் உளத்தாக்கத்திற்கு உள்ளானவர்களின் சௌக்கியத்தை சிறந்த நிலமையில் பேணுவதற்கு உகந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் தேவையை அரசிற்கும் மற்றும் தனிப்பட்ட பிரிவினருக்கும் எடுத்துக்காட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு அவசியமான விதப்புரையினை வழங்குதல் மற்றும் வழிகாட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பற்றில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆய்வு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு மற்றும் கரையோரப்பற்ற எனும் பிரதேசச் செயலகங்களில் உள்ள 5929 குடும்பங்கள் மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஆய்வு மூன்று மாதங்களாக நடாத்தப்பட்டதுடன், அந்த கற்கைத் தரவுகளின் அடிப்படையில் உள்ள பிரிவுகள் ஊடாக விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. அதில் உள்ள பிரதான பிரிவுகள் பின்வருமாறு

### I. கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான சந்தர்ப்பம்

யுத்தத்தினால் அகதிகளாகியவர்களுக்கான கல்வி மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதன் முக்கியத்துவம், தொழில் பயிற்சி சந்தர்ப்பத்தின் ஊடாக தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை உரவாக்கல் போன்ற விடயங்கள் அடங்கிய விதப்புரை உள்ளடக்கப்பட்டள்ளது.

## II. விவசாயம், கடல் கைத்தொழில் மற்றும் விலங்கு வளர்ப்பு

தமது வாழ்வாதாரமாக கொண்ட இந்த மக்களுக்கு அந்த நிலைமையை மேம்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை வழங்குவதன் அவசியம் கண்டிறியப்பட்டுள்ளது. அதற்குரிய விதப்புரை கவனத்திகு கொண்டுவருவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## III. பொருளாதார அபிவிருத்தி மற்றும் வறுமையைக் குறைத்தல்

பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக அவர்களின் விவசாய உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை விலையை வழங்குவதன் ஊடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் தொடர்பான நடைமுறைகள் உட்பட்ட விதப்புரையினை சமர்ப்பித்தல்.

## IV. உள மற்றும் உடல் நல நிலமையை மேம்படுத்துவதற்கான தேவை

யுத்தத்தினால் உள மற்றும் உடல் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு அவர்களின் பிரச்சினையில் இருந்து மீண்டும் வழமையான வாழ்க்கைத்து திரும்புவதற்கான ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள், சமூக சிகிச்சை செயற்திட்டங்கள் மற்றும் சுகாதார பிரச்சனை தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## V. சமூக மற்றும் உளச் சிகிச்கைகள்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு வாழும் இந்த சூழலினுள் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள், அங்கத்தவதுகளுக்கிடையில் சமூக ஒத்துழைப்புகள், ஒற்றுமை மற்றும் அந்யோன்நியத்தை அபிவிருத்தி செய்யும் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக சிகிச்சை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி தேவை என்பன எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான விதப்புரைகள் அடங்கிய அறிக்கையின் முன்வரைவு பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், உரிய அமைச்சருக்கு சமர்ப்பிப்பதன் மூலம் அவசியமான நடவடிக்கைகள் தொடர்பாக அரச மற்றும் தனியார் பிரிவுகளின் கவனத்தை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்கள் தொடர்பாக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 5.3 கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் 04 தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் 04 கிராம சேவைப் பிரிவுகளில் சமூக, பொருளாதார, கலாச்சரா மற்று் அரசியல் சவால்களுக்கு முகம் கொடுக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்ட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் கருத்திட்டம்.

**கருத்திட்டத்தின் நியதிகள் -**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | கிராம சேவையாளர் பிரிவு | தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கிளிநொச்சி | கரச்சி | அம்பாள் நகர் | 256 |
| | கண்டாவளை | பரந்தன் | 188 |
| | பச்சிரப்பிள்ளை | தம்பலகாமம் | 78 |
| | பூநகரி | பள்ளிக்குடா | 167 |
| | மொத்த எண்ணிக்கை | | 689 |

**கருத்திட்டத்தின் விசேட நோக்கம் -**

1. தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் வருமானத்தை மேம்படுத்தல்.
2. உள மற்றும் உடல் நலத்தை மேம்படுத்தல்.
3. தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் உள்ள இளைஞர்களின் தொழில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவித்தல்.
4. அரச பிரிவுகளில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதை அபிவிருத்தி செய்தல்.
5. ஆவசிய தகவல்களைப் பெற்றுக்கொள்வததை அபிவிருத்தி செய்தல்.

**கருத்திட்ட நடைமுறை -**

மேற்குறிப்பிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் அவசியத்தை கண்டறிவதற்கு இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட கேள்வி தொகுப்புகள் மூலம் தேவையை மதிப்பிடுவதற்கான ஆய்வு மேற்குறிப்பிட்ட கிராம சேவைப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அந்த ஆய்வுத் தகவல்களின்

அடிப்படையில், அடையாளம் காணப்பட்ட தேவையைப் பூர்த்திசெய்வதற்கு இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி நிறுவனம், தனியார் மற்றும் மக்கள் பங்காளி அணுகுமுறை பயன்படுத்தப்பட்டது. அதேபோல், பல்வேறுபட்ட உபாயமார்க்கங்கங்கள் இதற்காப் பயன்படுத்தப்பட்டது. அவை,

01. அரச சேவைவைப் பிரதேச செயலகப் பிரிவு பிரதேசச் செயலாளரில் இருந்து இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையினால் அடையாளம் காணப்பட்டு பெயரிடப்பட்ட சுயாதீன அலுவலர்களுக்கிடையில் இந்த கருத்திட்டத்தின் பங்களிப்பு பகிர்ந்து செல்லும் வகையில் பொறிமுறை அபிவிருத்தி செய்யப்பட்டது.

02. பல்வேறுபட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் அடையாளம் காணப்பட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவர்களின் பங்களிப்பு தொடர்பாக கூட்டம் நடாத்தப்பட்டது.

**ஆய்வின் பெறுபேறு –**

தேவைகள் மதிப்பீடப்பட்ட ஆய்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் தேர்ந்தெடுத்த குடும்பங்களில் கீழ்வரும் தேவைகள் கண்டறியப்பட்டது.

1. ஆலோசனைத் தேவை.
2. விவசாயத் தேவை
3. தொழில்பயிற்சித் தேவை
4. கல்வித் தேவை
5. சுயதொழில் தேவை

**கருத்திட்டத்தின் செயற்பாடுகள் -**

1. **ஆலோசனைச் சேவைகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**.

இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டவாறாகும்.

| பிரதேச செயலகப் பிரிவு | கிராம சவையாளர் பிரிவு | நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பங்களிப்பு செய்த அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் |
|---|---|---|
| கரச்சி | அம்பாள் நகர் | ஆராச்சி மற்றும் உளவியல் பற்றிய கொழும்பு நிறுவனம் (CIRP –Colombo Institute of Research and Psychology) |
| கண்டாவளை | பரந்தன் | சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் நடவடிக்கை அமைச்சு |
| பச்சிரப்பள்ளி<br>பூநகரி | தம்பகாமம்<br>பள்ளிக்குடா | சமூக சேவைகள் அமைச்சு |

**2. மரக்கன்றுகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்.**

விவசாய அமைச்சின் பங்களிப்போடு மரங்களை கோரிய குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

**3. சமூகத்துடன் இணைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்.**

சமூகத்துடன் இணைத்தல் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் இலங்கை தேசிய மனிதவள சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வ அலுவலர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனமான Stromme Foundation (Pvt) Ltd. இனால் நடாத்தப்பட்டது. இந்த நிறுவனத்தின் நோக்கமாக தன்னார்வத் தொண்டர்களை அறிவூட்டுவதன் மூலம் பயன்பெறும் குடும்பங்களை சமூகத்திற்கு இணைத்துக்கொள்வதாகும்.

**4. தொழில் பயிற்சி தேவை பற்றிய நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழச்சித்திட்டம் இளைஞர் நடவடிக்கை மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் பங்களிப்போடு நடாத்தப்பட்டது.

**5. கல்வித் தேவையை பங்கிர்ந்தளிப்பதற்கான நிகழ்ச்சதிட்டம்.**

இலங்கை தேசிய மனிதவள சபையினால் இளைஞர் நடவடிக்கை மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் நிறுவனங்களின் பங்களிப்புடன் கல்விப் பொருட்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

## 5.4 மத்திய கிழக்கு நாடுகள் பெண்கள் தொழிலுக்காகச் செல்லுதல் மற்றும் அதனால் ஏற்படும் சமூக விளைவுகள்

கடந்த காலங்களில் இலங்கை வாழ் மக்கள் சமூக, பொருளாதார மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்ததைக் காண முடிந்தது. ஆனால் அண்மையில் மக்கள் பொருளாதார பெறுமதிகளுக்காக வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்ததைக் காண முடிந்தது. காரணம் இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றாம் உலக நாடு ஆகும். ஒவ்வொரு மக்களினதும் பொருளாதார நிலமை வேறுபாடுகள், மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் பலப்படுத்துவதற்காகவும் மக்கள் விசேடமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வதற்கு காரணமாக அமைந்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிக்காகச் செல்வதனால் சமூகப்பிரச்சனைகளை அதிகமாக எதிர்கொள்ளும் மட்டக்களப்பு மாவட்டதில் இந்தக் கற்கை மேற்கொள்ளப்பட்டது. இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு சபையில் பதிவுசெய்தவர்களின் தரவுகளைப் பிரதிபலிக்கும் தற்காலிக தொழிலாளர்களாக சென்றவர்களின் எண்ணிக்கை மிகப்பிரச்சனையாக அமைகின்றது. இவர்கள் பெரும்பான்மையானோர் தொழில்திறனற்றவர்கள், வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் பகுதியளவல் திறன் பெற்ற தொழிலாளர்களாக இருப்பதுடன், இவர்கள் தொழிலுக்கு மத்திய கிழக்கு நாடுகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். அடுத்த பிரச்சினை என்னவெனில், இலங்கை பாரம்பரியமாக தொழில்திறனற்ற மற்றும் வீட்டுப் பணிப்பெண்களை கொண்டிருப்பதுடன், இந்த சந்தையில் தற்போது நுழைவதற்கு சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைக் கொண்ட அதிக திறன் உள்ள மற்றும் தொழில்சார் ஊழியர்களுக்கே கேள்வி காணப்படுகின்றது. அதேவேளை, உள்நாட்டு தொழிற்சந்தையை திருப்திப்படுத்துவதற்கும் இங்கு குறிப்பிடத்தக்க இடைவெளி காணப்படுகின்றது.

மட்டக்களப்பு பெண்களின் தொழிலுக்கான இடம்பெயர்வும் அதன் பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களுக்கான காரணங்களை பரீட்சித்துப் பார்ப்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். அத்துடன், இடம்பெயர்வு காரணமாக ஏற்படும் மறைத் தாக்கங்களுக்கு அனுகூலமான தீர்வுகளை பரிந்துரைப்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். மட்டக்களப்பில் உள்ள பெண்களின் வகிபாகத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக குடும்பங்களில் அது எவ்வாறான தாக்கத்தை உருவாக்கி உள்ளது என ஆய்வு செய்வதே இந்த ஆராய்ச்சியின் பிரதான நோக்கமாகும். ஆரம்ப மூலத் தகவல்கள் உரிய அதிகார சபைகள், அலுவலர்களிடம் பெறப்பட்ட நேர்முக உரையாடல்களில் இருந்தும் மற்றும் தொழில்வாய்ப்புக்கு செல்வதற்கு மற்றும் தொழில்வாய்ப்புக்கு சென்ற பின்னர் உள்ள குடும்பங்களில் இருந்து மாதிரிக் குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு கேள்விதொகுப்பு வழங்கப்பட்டு அதிலிருந்து பெறப்பட்ட தகவல்களில் இருந்தும் பெறப்பட்டது. இரண்டாம் தர மூலத் தகவல்கள் உரிய புத்தகங்கள், உடன்படிக்கைகள், சட்டங்கள், கற்கை ஜேர்னல்கள், இணையம், பத்திரிகை கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளில் இருந்து பெறப்பட்டது.

பெண்களின் தொழிலுக்கான இடப்பெயர்வு பிள்ளைகள் மற்றும் தந்தைகளில் மறைத் தாக்கத்தை உருவாக்கியுள்ளது என சில ஆரம்ப ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளமை இக்கற்கை கண்டறிந்துள்ளது. அதேவேளை, குடும்பங்களுக்கான நிதி நன்மைகள் மற்றும் அனேக பிள்ளைகள் தங்கள் தாய் இல்லாமையை அனுசரித்து உணர்வுபூர்வமாக வாழ்வதற்கு தயாரானமை போன்ற நேர்மறை தாக்கங்களும் இல்லாமலில்லை. பாடசாலைகளில் இருந்து விலகல்: தாய்மார் வெளிநாட்டுக்குச் சென்றதன் காரணமாக பாடசாலைகளில் இருந்து விலகும் எண்ணிக்கை கிராமப்புறங்களில் அதிகமாக காணப்படுகின்றது. விவாகரத்து: தொழிலுக்கான இடம்பெயர்ந்த மனைவி அல்லது கணவன் விவாகரத்துப் பெறுகின்றார் அல்லது வேரெரு நபரைத் திருமணம் புரிகின்றார். கண்காணிப்பாளர்கள் பிள்ளைகளிடம் சில மறை நடத்தை காணப்படுகின்றதை அவதானிக்கின்றனர். அரசாங்க நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு சமூக, பிரதந்திய மற்றும் தேசிய மட்டத்தில் குறைவாகக் காணப்படுகின்றது.

இந்த ஆய்வு மாநாடுகள், நேர்முக உரையாடல்கள், அவதானிப்புகள் மற்றும் ஆரம்ப மற்றும் இரண்டாம் தர தகவல் பகுப்பாய்வு என்பவற்றில் இருந்து சில விதப்புரைகளை கண்டறிந்துள்ளது: பிரதான முறைசாரா நேர்முக அரச பங்குதாரர்கள். அரசாங்கம், பாடசாலை முறைமை, சமூகம் மற்றும் குடும்பங்களுக்கு சில விதப்புரைகளை வழங்கியுள்ளது.

வறுமையில் இருந்து மீளவதற்காக வெளிநாட்டு தொழில்வாய்ப்பைத் தேடும் இலங்கை மக்களைப் பாதுகாப்பதன் தேவையை விளங்கிக்கொண்டதனால் அதன் ஒரு பகுதியாக இலங்கைக்கான தேசிய தொழிலாளர் இடம்பெயர்வுக் கொள்கைகள், தொழில் இடத்தில் அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் போன்ற குறைகள் மற்றும் உரிமைகள் மீளப்படுதல் போன்ற பலவடிவங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது. தொழில்வாய்ப்புக்காக இடம்பெயர்தலின் போது கிடைக்கும் நன்மைகளின் போது இடம்பெயர்ந்த குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் கவனிப்பு, பாதுகாப்பு மற்றும் கல்வி போன்றவற்றில் காணப்படும் பற்றாக்குறை போன்ற சமூகச் செலவுகள் கணிப்பிடப்படாதுள்ளதுடன், அவையும் கருத்தில்கொள்ளப்படல் வேண்டும். இக்கருத்திட்டத்தின் இறுதியில் தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் தலைவர், பணிப்பாளர் மற்றும் உதவி ஆணையாளரின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் இந்த நிலமைக்கு எதிராக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கொள்கை வகுப்பாளர்களுக்கு விதப்புரைகள் சமர்ப்பிக்கப்படும்.

## 5.5 முழுமைப் படைப்பு கோட்பாட்டின் ஊடாக குடும்பங்களில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தல்

முழுமைப் படைப்புக் கோட்பாட்டின் ஊடாக குடும்பங்களில் முழுமையாக அபிவிருத்தியை ஏற்படுத்தும் கருத்திட்டம் பல கட்டங்களாக செயற்படுத்தப்பட்டது. அதன் முதலாவது கட்டம் குடும்பத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய விதிகளை அடையாளம் காணுதல் ஆகும். அந்த நடவடிக்கைகளுக்கான பயிற்சிப் பட்டறைகள் இரண்டு தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்டது.

### I. முழுமைப் படைப்பு கோட்பாட்டின் ஊடாக குடும்பங்களில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தல் செயலமர்வு

இந்த நிகழச்சித்திட்டத்தின் முதலாவது பயிற்சிப்பட்டறை 08 ஏப்பிரல் 2014ம் திகதி ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. இந்த பயிற்சிப்பட்டறைக்காக நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு துறைகளில் உள்ள அனுபவசாலிகள் பங்குபற்றினர். கிராம சேவையாளர் மட்டத்தில் இருந்து ஜனாதிபதி செயலாளர் காரியாலயம் வரை முக்கியமான கல்வியாளர்களின் கருத்து கருத்திட்டத்திற்காக பெறமுடிந்தது இது முக்கியமான விடயமாகும்.

இந்தப் பயிற்சிப்பட்டறையின் போது பல்வேறுபட்ட துறைகள் தொடர்பாக குழுக்களினுல் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதனால் குடும்பத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான விதிகள் தங்கள் பிரிவுக்கு ஏற்றவகையில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தப் பிரிவுகள் கீழ்வருவனவாகும்.

- சுகாதார மற்றும் விவசாயக் கைத்தொழில்
- வீட்டு விபத்துகள், பாதை விபத்துகளில் இருந்தான பாதுகாப்பு
- தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல்
- வினைத்திறன் எண்ணக்கருப் பாவனை
- விழுமியங்கள்
- கல்வி
- செயற்படுத்துவதற்கான பொறிமுறையை கட்டியெழுப்பல்

### II. ஆரம்ப கற்கை பியகம சப்புகஸ்கந்த கிராம சேவைப் பிரிவுக்கு அண்மையில்

நிலையான அபிவிருத்தி குடும்பத்தினுள் ஏற்படாததற்கு காரணத்தைக் கண்டறிதல் ஆய்வு பியகம சப்புகஸ்கந்த கிராம சேவையாளர் பிரிவுக்கு அண்மையில் இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டது.

## III. இலக்கு குழுவின் கலந்துரையாடல்

பியகம சப்புகஸ்கந்த கிராம சேவையாளர் பிரிவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை அழைத்து இலக்கு குழுக்களின் கலந்துரையாடல் 19.05.2014ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இதன் போது குடும்ப அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான விதிகள் தொடர்பான அவர்களின் கருத்து கேட்டறியப்பட்டது. அபிவிருத்திக்காக மேலிருந்து கீழ்செல்லும் அணுகுமுறைக்கு மேலதிகமாக கீழிருந்து மேற்செல்லும் அணுகுமுறையையும் இக்கருத்திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினால் இயலுமானது. கிராம மட்டத்தில் பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட அன்றாட வாழ்வின் அனுபவங்களைக் கொண்ட இல்லத்தரசிகளும் பல்வேறுபட்ட தொழில்களைப் புரிபவர்களும் உள்ளடக்கி இந்த இலக்குக் குழு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

## IV. அங்கோடை உள நலன் கல்விநிறுவனத்தில் மற்றும் வெலிகடை சிறைச்சாலை கற்கை

பல்வேறுபட்ட மனநோய் நிலமை ஏற்படுவதற்கு இவ்வுலகில் பிறந்த எந்தவொரு நபருக்கும் சந்தர்ப்பம் உள்ளது. மனநோய் ஏற்படுவதற்கான காரணங்கள் விஞ்ஞானக் காரணங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டன. சிறுவர் மனப்பிறள்வுப் பிரச்சினைகள் (Child Related Disorders) மற்றும் மனஉளைச்சல் பிரச்சனைகள் (Anxiety Related Disorders ), அற்ககோல் பாவனையினால் (Alcohol Consumption)ஏற்படும் மனநோய்ப் பிரச்சனைகள், வலிப்பு நோய் (Epilepsy) , முளை முரண் மனநோய் (Schizophrenia), முதியோர்களுக்கான மனப்பிறள்வு (Mental Disorders of Elderly ), உளப்பாங்கு மனப்பிறள்வு (Affective Disorders ) என்பன இவற்றில் விசேடமானவையாகும். எனினும் குடும்பங்களினுள் நிலவும் ஒற்றுமை, பாதுகாப்பு என்பன உரிய முறையில் கிடைக்காத போது இந்த மனநோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதன் காரணமாக மனநோய் உளைச்சலுக்கு உள்ளாகும் இந்தக் குடும்பங்களினுள் பாதுகாப்பை வழங்கும் முறை தொடர்பாக இந்த கருத்திட்டத்தின் ஊடாக அறிவூட்டப்படும்.

வெலிசறை சிறைச்சாலையையொட்டி மேற்கொள்ளப்பட்ட கற்கையின் ஊடாக தெளிவான ஒரு விடயம் என்னவெனில் அனேக நபர்கள் சிறைச்சாலைக்கு வருவதற்கு அவர்களின் குடும்பம் தாக்கத்தைச் செலுத்தியுள்ளதென்பதாகும். சிறு வயதில் இருந்து சமூகத்துடனான தொடர்பாடல் வரையறுக்கப்பட்டிருத்தல், நேர்மையற்ற வழிகளில் பணத்தைப் பெற்றுக்கொள்ளல், சர்வதேச இடப்பெயர்வின் போது தாம் அறியாத நபர்களின் பயணப்பொதுகளை கொண்டு வந்த காரணத்தினால் போதைப் பொருள் வியாபாரம் தொடர்பாக சிறையில் இருத்தல், அவ்வாறு பொருத்தமில்லாத நபர்களுடன் உறவுகளைப் பேணியமையிலானால் சிறையிலிருத்தல் என்பன பிரதான காரணங்களாக அமைந்துள்ளது.

பல்வேறுபட்ட கற்கைகளில் இருந்தும், செயலமர்வுகளில் இருந்தும் தயாரிக்கப்பட்ட குடும்ப அபிவிருத்திக்கு உரிய விதிகள் உள்ளடங்கிய சொதுரு அத்வல எனும் சிறிய புத்தகம் எங்களால் உருவாக்கப்பட்டது.

**கருத்திட்டம் செயற்படுத்தப்பட்ட முறை**

இந்த கருத்திட்டத்தை செயற்படுத்துகையில் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கள உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டனர். ஆரம்பத்தில் மாவட்ட மட்டத்தில் குழுக்கள் நியமிக்கபட்டன.

- மாவட்டச் செயலாளர், தலைவர்
- திட்டப் பணிப்பாளர், செயலாளர்
- செயற்திறன் மேம்படுத்தல் அலுவலர்
- திறன் அபிவிருத்தி அலுவலர்
- விவாசாய பிரதிப் பணிப்பாளர்
- கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர்
- சுகாதார வைத்திய அலுவலர்
- கல்விப் பணிப்பாளர்
- பிரதி பிரதம செயலாளர்

**பிரதேச செயலகங்களில் பிரதேச குழுக்களை நியமித்தல்**

- பிரதேச செயலாளர், தலைவர்
- உதவிப் பிரதேசச் செயலாளர்
- உதவித் திட்டப் பணிப்பாளர்
- சுகாதார வைத்திய அலுவலர்
- விவசாய ஆலோசனையாளர்
- கமத்தொழில் சேவை பிரதேச அலுவலர்
- வலயக் கல்விப் பணிப்பாளர்
- மக்கள் சுகாதார பரிசோதகர்
- திறன் அபிவிருத்தி அலுவலர்
- செயற்திறன் மேம்படுத்தல் அலுவலர்
- பிரதேச சபைச் செயலாளர்
- திறன் அபிவிருத்தி அலுவலர் அல்லது செயற்திறன் மேம்படுத்தல் அலுவலர்
- அழைப்பாளர் மற்றும் செயலாளராகப் பெயரிடப்பட்டனர்

பிரதேசக் குழுக்களினால் முதலாவது கட்டமாக குறைந்த பட்சம் நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளைத் தேர்ந்தெடுத்தலுக்கு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் அபிப்பிராயத்திற்கு அமைவாக பிரதேச செயலாளரின் கருத்துப்படி பியகம மாகொல வடக்கு மத்திய ஹெயின்துடுவ தெற்கு, மாகொள வடக்கு கீழ் கிராம சேவையாளர் பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. திக்வல் பிரதேச செயலகப் பிரிவில் இருந்து பம்பரகந்த மத்திய, பத்திகம கிழக்கு, ஊறுகமுவ தெற்கு, திகவல்ல கிழக்கு எனும் கிராம சேவையாளர் பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் இருந்து மாவட்டச் செயலாளரின் விருப்பத்திற்கு அமைவாக 612 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகள் நான்கிற்கும் கிராமியக் குழுக்களை நிறுவுதல். அதற்கு

- பொருளாதார அபிவிருத்தி அலுவலரினால் அபிவிருத்தி உத்தியோகத்தர்.
- கிராம சேவை அலுவலர்
- சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்
- விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்
- குடும்ப சுகாதார சேவை அலுவலர்
- கிராமத்து பாடசாலை ஆசிரியர்
- பிரதேச செயலாளரினால் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தேவைக்கு அமைவாக ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 50 குடும்பங்களை மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு அலுவலருக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டது
அந்த 50 குடும்பங்களில் இருந்து 10 குடும்பத்திற்கு ஒரு நபர் தன்னார்வ சேவையாளராக நியமித்துக்கொள்ளப்பட்டார்.
அந்த தன்னார்வ சேவையாளருக்கு 10க் குடும்பங்கள் பாரமளிக்கப்பட்டது.
ஒரு அலுவலருக்கு 5 தன்னார்வ சேவையாளர்களை வழங்கப்பட்டது. இதன் பின்னர் இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் பிரதேச செயலாளர் மட்டத்தில் செயலமர்வுகள் நடாத்தப்பட்டது.

இந்த செயலமர்வுக்காக, மதத் தலைவர்கள், மாகாண சபை நிறுவனத் தலைவர்கள், பிரதேச செயலகத்தில் உள்ள அனைத்து நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள், பிரதேச மட்டத்தில் உள்ள அனைத்து திணைக்களத் தலைவர்கள் (விசேடமாக கமத்தொழில் சேவை, விவசாயம், சுகாதாரம், கல்வி, பொலிஸ்), பிரதேச செயலகத்தில் உள்ள அனைத்து கள உத்தியோகத்தாகள், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சேவை பிரிவு கிராம சேவையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர், குடும்ப சுகாதார உத்தியோகத்தர், பாடசாலை அதிபர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வ சேவையாளர்கள் பங்குபற்றினர்.

பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன், அதன்போது ஒவ்வொரு அலுவரினதும் பணிகள் தெளிவாக்கப்பட்டது. அதன் பின்னர் போதியளவு விதிகளைக் கொண்ட கைநூல் தேர்ந்தெடுக்கப்ட்ட அலுவலர்கள் மற்றும் தன்னார்வ சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

ஒவ்வொரு குடும்பத்திற்கு புள்ளி வழங்கும் மதிப்பீட்டு பத்திரம் பெறப்பட்டு அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்குதல், அத்துடன் பிரதேச செயலாளரின் தலைமையின் கீழ் அனைத்து அலுவலர்களின் பங்களிப்புடன் மற்றும் அனைத்துக் குடும்பங்களின் பங்களிப்புடன் கிராமத்தை அறிவூட்டும் செயலமர்வு நடாத்தப்பட்டதுடன், அது பிரதேச செயலாக அலுவலகத்தினால் அல்லது மாவட்டச் செயலக அலுவலகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டது.

அனைத்து வீடுகளிலும் தற்போதுள்ள நிலமையை புகைப்படம் எடுப்பதற்கும் மற்றும் தன்னார்வ சேவையாளர்கள் கிழமைக்கு ஒருதடவையும் உரிய அலுவலர் மாதத்திற்கு ஒரு தடவையும் விஜயம் செய்து அவர்களை ஊக்குவிப்பதற்கும் மதிப்பீட்டினை பதிவதற்கு எங்களால் ஆலோசனை வழங்கப்பட்டது. பிரதேச செயலாளர் அல்லது உதவிப் பிரதேச செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் அனைத்து கிராம மக்களுக்குமான கூட்டம் நடாத்தப்பட்டு முன்னேற்றத்தை அளவிடப்படல் வேண்டும் என்பதுடன் அதன் கீழ் கீழ்வரும் படிமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- கிராமக் குழு மாதம் தோறும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
- பிரதேசக் குழு 3 மாதத்திற்கு ஒருமுறை முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்
- கிராமிய குழுவினால் மாதம் தோறும் பிரதேச செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல்.
- பிரதேச செயலாளரினால் முன்னேற்றம் தொடர்பாக இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை மற்றும் மாவட்டச் செயலாளருக்கு அறிக்கை இடுதல். அறிக்கையிடுவதற்கான மாதிரிப் படிவம் இணைப்பு 04இல் காட்டப்பட்டுள்ளது.
- வருட இறுதியில் மாவட்டச் செயலாளர் பிரதேச செயலாளர் உட்பட அலுவலர்கள் கிராமத்தில் உள்ள வீடுகளில் அவதானிப்புகளை மேற்கொள்ளவதற்னான விஜயங்களை மேற்கொள்ளல் வேண்டும்.
- வருட இறுதியில் மதிப்பீடுதல் மற்றும் வெற்றியாளரைத் தேர்ந்தெடுத்தல். வெற்றியாளருக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். இறுதி நிலை புகைப்படம் எடுக்கப்படும்.

இந்த கருத்திட்டத்தை செயற்படுத்தும் முறை மேற்குறிப்பிட்டவாறு அமைவதுடன், இது முன்னோடிக் கருத்திட்டமாக 2014ம் ஆண்டு செயற்படுத்தப்பட்டதுடன். இது தொடர்பாக அனேகமானோரிடமிருந்து சிறந்த பாராட்டு கிடைத்துள்ளது.

## 5.6. தயட கிருள நிகழ்ச்சித்திட்டம்

**<u>நேர்மறைச் சிந்தனை மாற்றத்தின் ஊடாக சிறந்த அரச சேவை</u>**

ஆண்டு தயட கிருள நிகழ்ச்சிக்கு சமாந்தரமாக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்பட்ட பல நிகழ்ச்சிகளில் ஒரு நிகழ்ச்சத்திட்டமாக அரச சேவை பயணத்திற்கு மக்கள் சேவையாளர்களின் எண்ணத்தை நேர்மறையாக மாற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களைக் கேந்திரப்படுத்தி நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டள்ளது. மக்கள் அபிமான சேவையை வழங்குவதற்கு ஏற்றவகையில் அரச சேவையாளர்களின் எண்ணத்தை நேர்மறைச் சிந்தனையாக மாற்றுவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

2014 ஓகஸ்ட் 18ம் திகதி முதலாவது செயலமர்வு காலி வக்வல்ல முகாமைத்துவ அபிவிருத்தி மத்தியநிலையத்திலும் இரண்டாவது செயலமர்வு ஓக்ஸ்ட் 28ம் திகதி இரத்தினபுரி மாகாண சபை கேட்போர் கூடத்திலும் மூன்றாது செயலமர்வு செப்டெம்பர் 19ம் திகதி ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திலும் நான்காவது செயலமர்வு ஒக்டோபர் 10ம் திகதி மாத்தறை மாவட்டத்திலும் ஐந்தாவது செயலமர்வு காலி மாவட்டத்திலும் நடாத்தப்பட்டது.

ஒழுங்கமைக்கப்பட்ட நிகழச்சித்திட்டம் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு அமைகின்றது.

| யாருக்காக | இடம் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தெற்கு மாகாண சபையின் நிறைவேற்றுத்தர ஊழியர்களுக்காக | காலி வக்கல்ல முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி மத்தியநிலையம் | 120 |
| சப்ரகமுவ மாகாண சபை நிறைவேற்றுத்தர ஊழியர்களுக்காக | இரத்தினபுரி மாகாண சபை கேட்போர் கூடம் | 163 |
| ஹம்பான்தோட்டை மாவட்டத்தின் அரச சேவையில் உள்ள நிறைவேற்றுத்தர ஊழியர்களுக்காக | ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம் | 211 |
| மாத்தறை மாவட்டத்தின் நிறைவேற்றுத்தர ஊழியர்களுக்காக | மாத்தறை மாவட்டச் செயலக கேட்போர் கூடம் | 145 |
| காலி மாவட்டத்தின் அரச சேவையில் உள்ள நிறைவேற்றுத்தர ஊழியர்களுக்காக | காலி மாவட்டச் செயலக கேட்போர் கூடம் | 162 |

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் போது அவர்கள் எங்களுக்கு வழங்கிய பெறுபேறுகளுக்கு அமைவாக 74% வீத அதிக பெறுபேறு கிடைக்கப்பெற்றது இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காகும். அத்துடன் 24% வீதத்தினர் இது சிறந்த நிகழ்ச்சித்திட்டம் எனப் பெறுபேற்றை வழங்கியிருந்தனர். நிகழ்ச்சித்திட்டதில் இருந்து கிடைக்கப்பெற்ற அறிவூட்டலுக்கு அமைவாக அரச சேவை தொடர்பான அவர்களின் எண்ணக்கரு தொடர்பான அவர்களின் சிந்தனை நேர்மறையாக வளர்ச்சி அடைந்துள்ளதென்பது முன்-பின் மதிப்பீடுகளில் இருந்து தெளிவாகியது. மொத்த மதிப்பீட்டில் இருந்து தெரியவருவது இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுமதியை அவர்கள் நன்றாக விளங்கிக்கொண்டமையாகும். எதிர்காலத்தில் ஏனைய மாவட்டங்களையும் கருத்தில் கொண்டு நிகழ்ச்சீத்திட்டங்களை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நாளைய தின அரச சேவையின் முன்னேற்றத்திற்கு இவ்வாறான நிகழச்சித்திட்டங்களின் பங்களிப்பானது அளப்பரியதாகும்.

## 5.7 இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினுள் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்தல்

அறிமுகம் -

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை, இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் முக்கிய பணிகளை ஆற்றுவதற்காக 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனம் ஆகும். அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டள்ள அதிகாரத்தின் கீழ் மனிதவள அபிவிருத்தி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குதல், மனிதவள அபிவிருத்திக்காக கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல், செயற்படுத்துதற்கு உதவிகளை வழங்குதல் போன்ற முக்கிய பணிகளின் பொறுப்பினை வகிக்கின்றது.

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையிடம் உள்ள வரையறுக்கப்பட்ட வளத்தினை வினைத்திறன் மற்றும் உச்சளவு உற்பத்தித்திறனுடன் பயன்படுத்தி இந்த நிறுவனத்தை வினைதிறனை, உற்பத்தித்திறனை மற்றும் தரத்தினை அதிகரித்து நிறுவனம் நிறுவப்பட்ட மேற்கூறிய நோக்கத்தை அடைவதற்கு உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நடைமுறையினை பின்பற்றி நிறவனத்தின் தற்போதைய செயலாற்றுகையை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு கருத்திட்டம் தயாரிக்கப்பட்டள்ளது. இந்த செயன்முறையின் போது உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு ஜப்பான், சிங்கப்பூர் உட்பட பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் எண்ணக்கரு மற்றும் எங்கள் கலாச்சாரத்திற்கு உரிய பாரம்பரிய உற்பத்தித்திறன் எண்ணக்கரு என்பவற்றைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த முயற்சியின் விளைவாக இலங்கை தர நிறுவனத்தினால் வழங்கப்படும் ISO 9001:2008 தர முகாமைத்துவ முறைமை சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதனை எதிர்காலத்திலும் பயன்படுத்துவதற்கும், தேசிய செயற்திறன் காரியாலயத்தினால் வழங்கப்படும் உற்பத்தித்திறன் விருதினைப் பெற்றுக்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரட்டிய நோக்கம்**

16 வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் ஆரம்பத்தில் இருந்து இன்று வரை மக்களின் பணத்தில் பராமரிக்கப்படுவதனால், நாடு முழுவதிலும் மனிதவள அபிவிருத்திக்கு உரிய ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் இது வரை உருவாக்கப்படாததனால், அவ்வாறு உருவாக்குவதற்கு இந்த நிறுவனம் போதியளவு முயற்சியை எடுக்காததனால், மனிதவளம் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் முக்கிய காரணியாக இருப்பதனாலும், அந்த முயற்சியை வெற்றிகரமாக மாற்றுவதற்கு நாட்டின் மனிதவள அபிவிருத்திக்கு அத்தியாவசியமான காரணியாக அமைந்துள்ளதனாலும், அது தொடர்பாக இந்த சபையின் கவனிப்பை கொண்டுவரும் முக்கிய பிரிவு ஆகும். அதனால் அதற்கு ஊழியர்களை உற்பத்தித்திறனுடன் பயன்படுத்தல் மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவ முறைமையை உரிய முறையில் தயாரிப்பதற்கு சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தித்திறன் மேம்படுத்தல் மற்றும் தர முகாமைத்துவ முறைமையை மேம்படுத்தல் அவசிய காரணியாக அமைகின்றது.

இந்த நிலமையை கவனத்தில் கொண்டு 2014ம் ஆண்டு சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தித்திறன் மற்றும் தர மேம்படுத்தல் நியமத்தை இந்த சபையினுள் பிரயோகிப்பதன் மூலம் சிறந்த மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அவசியமான கொள்கையை உருவாக்குவதற்கு அரசுக்கு அவசியமான விதப்புரையினை வழங்குவதற்கு ஏற்றவகையில் நிறுவனத்தை மேம்படுத்துவதற்கு இந்த கருத்திட்டத்தின் திரட்டிய நோக்கமாகும்.

**செயற்படுத்தும் முறை -**

இந்த நிறுவனத்தினுள் நடைபெறும் உள்ளக நடவடிக்கைகள் சிறந்த ஒழுங்குமுறையில் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வதற்கு இந்தக் கருத்திட்டம் இரு கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. அவை,

- நிறுவனத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
- நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் மொத்தப் பணிகளின் தரத்தினை மேம்படுத்தல்.

**இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையினுள் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான செயன்முறைகள்**

- தேசிய உற்பத்தித்திறன் விருதினைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தை அவதானிப்பதன் மூலம் அது பற்றி விளங்கிக்கொள்ளல்.

- இதற்காக சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதி, சுற்றாடல் உற்பத்தித்திறன் எண்ணக்கரு தொடர்பாக விளங்கிக்கொள்வதற்கு கண்டலம ஹொட்டல் சுற்றாடலை அவதானித்தல்.

- உற்பத்தித்திறன் எண்ணக்கரு தொடர்பாக ஊழியர்களுக்கு அறிவினைப் பெற்றுக்கொடுப்பதற்காக அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். அது தொடர்பான சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டள்ளது.

| தொடர் இல. | அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | வளப் பங்களிப்பாளர் பற்றிய விபரங்கள் |
|---|---|---|
| 01 | உற்பத்தித்திறன் எண்ணக்கரு தொடாபான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம். | திரு.டபில்யூ.எம். மத்தும பண்டார வீரசேகர – பணிப்பாளர் (முன்னைய) உற்பத்தித்திறன் செயலாளர் காரியாலயம். |
| 02 | உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்தல் கருத்திட்டம். | திரு. விஜய விக்ரமரத்ன -NHRDC தலைவர் |
| 03 | ISO 9001:2008 தர சான்றிதழைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவம். | திருமதி. காஞ்சனா லொகுகீகன – உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) இலங்கை தரநியம நிறுவனம். |
| 04 | NHRDC நிறுவனத்தினுள் ISO 9001:2008 தரச் சான்றிதழைப் பெற்றுகடகொள்வதற்கான பணிகள் | திரு நிஹால் ஆட்டிகல – ஆலொசகர் Quality Trilogy Consultancy & Training Services |
| 05 | தரம் தொடர்பான எண்ணக்கரு | திரு. விஜய விக்ரமரத்ன -NHRDC தலைவர் |
| 06 | தேசிய உற்பத்தித்திறன் போட்டி தொடர்பான அறிவூட்டல் அறிவுரைகள் | திரு சுரங்க குணரத்ன – பணிப்பாளர், உற்பத்தித்திறன் செயலாளர் காரியாலயம். |
| 07 | தர முறைமை தொடாபான அறிவுரை | திரு சுரங்க குணரத்ன – பணிப்பாளர், உற்பத்தித்திறன் செயலாளர் காரியாலயம். |
| 08 | அதிசிறந்த அனுபவம் மற்றும் | திருமதி. சியாமா பிரனாந்து - உற்பத்தித்திறன் செயலாளர் காரியாலயம். |
| 09 | முழுமையான உற்பத்தித்திறன் | திரு.ஈஷா ரத்ன கமல் உற்பத்தித்திறன் |

| | | |
|---|---|---|
| | பராமரிப்பு எண்ணக்கரு | செயலாளர் காரியாலயம். |
| 10 | பச்சை உற்பத்தித்திறன் எண்ணக்கரு | திரு சுரங்க குணரத்ன – பணிப்பாளர், உற்பத்தித்திறன் செயலாளர் காரியாலயம். |
| 11 | ஒப்பீட்டு நிர்வாக குறிப்பு முறைமை | திரு.உபாலி மாரசிங்க – செயலாளர், உற்பத்தித்திறன் செயலாளர் காரியாலயம். |
| 12 | கைசன் எண்ணக்கரு | திரு.என். குலரத்ன |
| 13 | சிக்ஸ் சிக்மா எண்ணக்கரு | திரு சுரங்க குணரத்ன – பணிப்பாளர், உற்பத்தித்திறன் செயலாளர் காரியாலயம். |
| 14 | 5 எஸ் எண்ணக்கரு | திரு. விஜய விக்ரமரத்ன -NHRDC தலைவர் |

- நிறுவனத்தினுள் 5 எஸ் எண்ணக்கருவை செயற்படுத்தல்
- வருடாந்த கையிருப்பு ஆய்வினை மேற்கொள்ளல்
- நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுக்கும் குறிப்பிட்ட வர்ணங்களை வழங்குதல் அதற்கேற்ற வகையில் அனைத்து ஆவணங்களையும் தயாரித்தல்.
- பணி நடைமுறையினைத் தயாரித்தல்
- குறிப்பு பத்திரங்களை இலக்கமிடுதல்
- கோவை அடங்கும் கபினட்டை இலக்கமிட்டு அதில் இருக்கும் கோவைகளின் இலக்கத்தை கதவில் ஒட்டுதல்
- கபினட்டில் கோவைகளை ஒழுங்குமுறையில் அடுக்குதல்
- படிவங்களை ஒழுங்குமுறையில் தயாரித்தல் மற்றும் அடுக்குதல்.
- ஊழியர்களின் யோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு யோசனைப் பெட்டியினைத் தயாரித்தல்
- 5 எஸ் அறிவித்தல் பலகையை காட்சிப்படுத்தல்
- பிரிவுகளுக்குப் பெயரிடுதல்
- அறிவித்தல் பலகை மற்றும் புகைப்படப் பலகையை நிறுவுதல்
- அனைத்து மின்சார குமிழ் மற்றும் மின் ஆளிகளை அடையாளம் காண்பதற்கு வசதியாக அவற்றினை இலக்கமிடுதல்.
- நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியை காட்சிப்படுத்தல்
- சுத்தப்படுத்துவதற்கு ஒவ்வொரு நாளும் 5 நிமிடத்தை ஒதுக்குதல்
- இந்த நடவடிக்கைகளை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கு ஒழுங்கு முறையிலான நடைமுறையை நிறுவுதல்
- 5 எஸ் கணக்காய்வு குழுவினை நிறுவுதல்
- 5 எல் கணக்காய்வினை ஆரம்பித்தல்
- நிறுவனத்தில் காணப்படும் நிலமையை வீடியோ எடுத்தல் மற்றும் புகைப்படமெடுத்தல்

- உபகரணங்களின் விபரங்களை காட்சிப்படுத்தல்
- மாதிரிப் படிவங்களை ஒழுங்குமுறையில் தயாரித்தல் மற்றும் அடுக்குதல்
- நிறுவனத்தினுள் தரக் குழுக்களை நியமித்தல்.

இந்த நிறுவனத்தினுள் 2014ம் ஆண்டு தரக் குழுக்கள் மூன்று நிறுவப்பட்டது.

- அருணலு
- திவாகர
- சந்த கன்

எனும் பெயர்களின் நிறுவனத்தின் அனைத்து அலுவலர்களும் இணைந்து கொள்ளும் வகையில் தரக் குழுக்கள் மூன்று நிறுவுப்பட்டது. இந்த மூன்று குழுக்களினால் ஏழு கூட்டங்கள் நடாத்தப்பட்டு அறிவுக் குவியல் போன்ற முறைமைகளைப் பயன்படுத்தி கண்டறியப்பட்ட பிரச்சனைகள் தொடர்பாக தேர்தல் நடாத்தப்பட்டது. அதன்படி கண்டறிப்பட்ட பிரச்சினைகளுக்கு அதனுள்ளிருந்து தீர்வினைக் காணல் மேற்கொள்ளப்பட்டது.

- கைசன் யோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நிறுவனத்தின் ஊழியர்களின் நன்மைகளை அபிவிருத்தி செய்வதற்கு நலன்புரி சங்கமொன்றை ஆரம்பித்தல்.
- நிறுவனத்தினுள் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உற்பத்தித்திறன் மாதத்தை ஒழுங்குசெய்தல்.

**<u>இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினுள் மேற்கொள்ளப்பட்ட திரட்டிய செயற்பாடுகளின் தரத்தினை மேம்படுத்தவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.</u>**

- ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தை அவதானிப்பதன் மூலம் அது தொடர்பான முழுமையான அறிவினைப் பெற்றுக்கொள்ளல்.
    - சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதி
    - அரச சேவை ஆணைக் குழு

போன்ற நிறுவனங்களை அவதானிப்பதன் மூலம் இந்த எண்ணக்கரு தொடர்பான முழுமையான அறிவினைப் பெற்றுக்கொள்ளல்.

- ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதின் முக்கியத்துவம் மற்றும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக ஊழியர்களை அறிவூட்டல்.

- ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக ஆலோசனையாளர் ஒருவரை ஒழுங்குமுறையில் தேர்ந்தெடுத்து நியமித்தல்.
- சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து இலங்கை தர நிறுவனத்திற்கு வழங்குதல்.
- முகாமைத்துவப் பிரதிநிதி மற்றும் உப முகாமையாளர் பிரதிநிதிகளை நியமித்தல்.
- இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைக்கு அவசியமான தரக் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை ஒவ்வொரு அலகிலும் காட்சிப்படுத்தல்.
- இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைக்கு அவசியமான தர முகாமைத்துவ முறைமையை நிறுவுதல்.
- நிறுவனத்தின் அனைத்து கோவைகளுக்கும் ஒழுங்குமுறையில் இலக்கங்களை வழங்குதல்.
- நிறுவனத்தினுள் பணிகளை இலகுவாக ஆற்றுவதற்கு பொருத்தமான படிவங்கள் மற்றும் ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நிர்வாகத்திற்குட்படுத்தி அறிக்கை கோவையைத் தயாரித்தல்.
- உள்ளக மற்றும் வெளியக மாதிரிப் படிவங்களை வேறு வேறாக நிர்வாகத்திற்குட்படுத்தல்.
- நிறுவனத்தில் ஒவ்வொரு பிரிவிலும் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடாபான செயற்பாட்டு ஏடொன்றைத் தயாரித்தல்.
- நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் உப பணிகள் தொடர்பாக அறிவுறுத்தல் ஏடொன்றைத் தயாரித்தல்.
- நிறுவனத்தினுள் மேற்கொள்ளப்படும் இணங்கா செயற்பாடுகளை சீர்படுத்தல்.
- நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்குமாறு திட்டத்திற்கு அமைவாக கணக்காய்வுக்கு உட்படுத்தல்.
- அனைத்து பிரிவிலும் அடைய வேண்டிய இலக்குகளை நிர்மாணித்தல் மற்றும் ஒவ்வொரு மாதமும் அடையப்பட்ட இலக்குகளின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல்.
- நிறுவனத்தினுள் நடைபெறும் தடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளை அறிக்கையிடுதல்.
- முகாமைத்துவ விசாரணைக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் உள்ளக கணக்காய்வில் கண்டறியப்பட்ட குறைபாடுகளைக் கலந்துரையாடல்.
- ஒவ்வொரு பிரிவிலும் மேற்கொள்ளப்படும் இணங்காமை செயற்பாடுகளை அறிக்கையிடுதல்.
- தரவுப் பகுப்பாய்வு மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சி ஏற்படுதல்.
- காலங்கடந்த ஆவணங்களை கோவைகளை இற்றைப்படுத்தல்.
- நிறுவனம் தொடர்பாக வெளியார்கள் வழங்கும் முறைப்பாடுகளை நிறுவனத்தின் தலைவர் ஆவணப் பதிவேட்டில் பதிதல்.

- நிறுவனத்தினால் ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி தேவைகளை ஒழுங்குமுறைப்படுத்தி அவற்றினைக் கண்டறிதல் மற்றும் பயிற்சித் திட்டத்தினைத் தயாரித்தல்.
- இலங்கை தர நிறுவனத்தினால் முதலாவது கணக்காய்வினை மேற்கொள்ளப்பட்டது.
- முதலாவது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்து இறுதிக் கணக்காய்வினை மேற்கொள்ளளப்பட்டது.
- அதில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து ISO 9001:2008 சான்றிதழைப் பெற்றுக்கொள்ளளப்பட்டது.

**பெறுபேறு -**

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை 04.11.2014ம் திகதி ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றுதலைப் பெற்றுக்கொண்டது. இது 13.11.2017ம் ஆண்டு வரை செல்லுபடியாகும். உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்தும் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதன் ஊடாக கிடைக்கக்கூடிய நன்மைகளைக் கவனத்தில்கொள்ளும் பொழுது மொத்தப் பணிகளையும் தர முகாமைத்துவ முறைமைக்கு அமைவாக மேற்கொள்வதற்கு இயலுமாவதுடன், நிறுவனத்தின் அனைத்து ஆவணங்களும் நிர்வாகத்திற்குட்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன்படி, நிறுவனத்தினுள் உள்ள ஆவணங்கள், மாதிரி படிவங்கள் போன்றவற்றை இலகுவாக அடையாளம் காண்பதற்கும், நாளாந்த பணிகளை மிகச்சிறந்த ஒழுங்கு முறையிலும் மற்றும் இலகுவாக மேற்கொள்வதற்கும் முடிவதுடன், தேவையற்ற அசைவுகளை நிறுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவினாலும் அடைய வேண்டிய தர நோக்கத்திற்கு இசைவாக அவற்றினை பூர்த்திசெய்வதற்கு நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், ஒவ்வொரு பிரிவினால் செயற்படுத்தப்படும் மொத்தப் பணிகளும் பூர்த்தியாகும் வகையில் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு ஏட்டுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும்.

எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு முடிவதனால், தற்போது நிறுவனத்தினுள் ஏற்படும் பிழைகளை சரிசெய்வதற்கு முடிவதனால் நிறுவனத்தின் திரட்டிய நோக்கத்தை வினைத்திறனுடன் அடைவதற்கு முடிதல்.

உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதன் ஊடாக தர முகாமைத்தவ முறைமைக்கு இசையாத நடவடிக்கைகளை அடையாளம் கண்டு அதனை திருத்துவதற்கு முடிதல், முகாமைத்துவ விசாரணை கூட்டங்களை நடத்துவதன் ஊடாக நிறுவனத்தின் திரட்டிய செயற்பாடுகளின் குறைகளை கலந்துரையாடல் மூலம் அவற்றினைத் தீர்ப்பதற்கு முடிதல்.

நிறுவனத்துடன் தொடர்புபடும் வெளியாளர்கள் வழங்கும் முறைப்பாடுகளை ஒழுங்குமுறையில் அடையாளம் காண்பதுடன் நிறுவனத்தில் உள்ள குறைகளை விளங்கிக்கொள்வதற்கு முடியுமாதல்.

நிறுவனத்தின் மொத்த நடவடிக்கைகளையும் மிகவும் சரியாக, செயற்திறனுடன் மற்றும் வெளிப்படையாக மேற்கொள்வதற்கு அவசியமான பாதையை அமைத்துக்கொடுப்பதற்கு இந்த ISO 9001:2008 சர்வதேச சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன் மூலம் இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

**நிலையான தன்மை -**

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் 2014ம் ஆண்டு பெறப்பட்ட ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழைப் பாதுகாப்பதற்கு முகாமைத்துவ பிரதி, உப முகாமைத்துவப் பிரதி மற்றும் உரிய கருத்திட்டத்திற்கு பொறுப்பான அலுவலரின் பொறுப்பாக அமைவதுடன், உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு தொடர்ந்து நடத்துவதன் மூலம் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு கூட்டங்களை தொடர்ந்து நடத்துவதன் மூலம் இதனைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அதேபோல் தர முகாமைத்துவ முறைமை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவனத்தினுள் ஒழுங்குபடுத்துவதன் மூலம் அது தொடர்பாக ஊழியர்களின் அறிவனை அதிகரித்தல் மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவர்களைத் தொடர்புபடுத்துவதன் மூலம் இதனை பாதுகாத்துக்கொள்வதற்கு முடியுமாகும்.

## 5.8 நிறுவனத்தினுள் மின்னலத்திரனியல் ஆவண முறைமையை செயற்படுத்துதல்

இலங்கை அரச நிறுவனங்கள் தங்கள் கடமைகளையாற்றும் பொழுது கடதாசி பதிவேடுகளை பயன்படுத்துவதுடன், தொடர்பாடலுக்கு வழமையான கடித முறை பயன்படுத்தப்படுகின்றது. எனினும் சில அரச நிறுவனங்களின் ஊடாக பதிவேடு முகாமைத்துவ முறைமை மற்றும் மின்னஞ்சல் முறைமை பயன்படுத்தப்பட்டு மின்னிலத்திரனில் ஆவணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அரச No /SB/01/13 ம் சுற்றுநிருபத்திற்கு அமைவாக எங்கள் நிறுவனத்திலும் மின்னிலத்திரனியல் ஆவண முகாமைத்துவ முறைமை தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. இந்த மின்னிலத்திரனியல் முறைமையினுள் சாதாரண செயற்பாடாக word documents ஆவணங்களை பயன்படுத்துவதற்கு இயலுமான வகையில் செய்யப்பட்டள்ளது. இந்த ஆவண வகையாக pdf ஐக் குறிப்பிட முடியும். இந்த இரு வகை ஆவணங்களும் இந்த முறைமையில் பயன்படுத்தப்படுகின்றது.

**இவ்வகையான முறைமையைப் பயன்படுத்தவதன் நன்மைகள்**

- கடதாசி கோவைகளுக்கும் கபினட்களுக்கும் பாரியளவு இடம் மற்றும் செலவு அவசியமாகும். ஆனால் மின்னலத்திரனியல் ஆவணங்களுக்கு பௌதீக ரீதியாக இடம் தேவையில்லாததுடன், இவ்வாறான ஆவணங்களைப் பேணுவதற்கு மிகக் குறைந்த செலவே ஏற்படுகின்றது.
- மின்னிலத்திரனியல் ஆவணப் பயன்பாடு உயர் மட்டத்தில் பேணப்படுகின்றது. அந்த ஆவணங்களி மிகக் குறைந்த செலவுடன் பிரதியெடுக்கக்கூடியதாக இருப்பதனால் அவற்றை இலகுவாக பாதுகாக்க முடியும்.
- சாதாரண ஊழியரொருவர் வருடத்திற்கு 400 மணித்தியாளங்களை கடதாசி ஆவணங்களைத் தேடுவதற்கு செலவழிக்கின்றார்கள் எனக் கணிப்பிடப்பட்டள்ளது. மின்னலத்திரனியல் ஆவணங்களை தேடுவதற்கு செலவிடும் காலம் மிகக் குறைவாகும்.
- அலுவலக முறைமையினுள் மின்னலத்திரனியல் ஆவணங்களை மட்டும் பயன்படுத்தினால் அவற்றினை நிர்மாணிப்பதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு, பாதுகாப்பாற்கு மற்றும் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான காலம் மற்றும் செலவு மிகக் குறைவாகும்.
- கடதாசி இல்லாத செயற்பாட்டின் மூலம் காபன் பாத அச்சைக் குறைத்துக்கொண்டு பாதுகாத்துக்கொள்ள முடியும்.

## 5.9 மனிதவள அபிவிருத்தி தொடர்பான தகவல்களை வங்கியில் பேணுதல்

1997ம் ஆண்ட 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிரத்திச் சட்டத்தின் கீழ் மனிதவள அபிவிருத்தி மற்றும் அது தொடர்பான துறைகள் தொடாபான தகவல்கள் அடங்கிய தரவு வங்கியொன்றைப் நிறுவிப் பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எங்களினால் தொழில் கற்கைநெறிகளைப் பயில விரும்பும் இளைஞர்களின் மற்றும் தொழில் தேடும் இளைஞர்களின் தகவல்கள் அடங்கிய தரவு முறையொன்று www.nhrdc.gov.lk/index.php எனும் இணையத்தளத்தில் பேணப்படுகின்றது. இந்த இணையச் சேவை மூலம் தொழில் வழங்கும் நிறுவங்களுக்கு மற்றும் தொழில் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

## 5.10 செய்தித்தாள்

நிறுவன, கைத்தொழில் மற்றும் இளைஞர்களுக்கிடையில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுவதில் காணப்படும் இடைவெளிகளைக் குறைக்கும் நோக்கத்துடன் எங்கள் சபையினால் வருடாந்தம் இரண்டு செய்தித்தாள்கள் வெளியிடப்படுகின்றதுடன், அதன் முதலாவது பிரதி 2014 ஜுன் மாதத்திலும் இரண்டாவது பிரதி டிசம்பர் மாதத்திலும் வெளியிடப்பட்டது.

## 6. 31.12.2014ம் திகதியன்று நிதிக் கூற்று

இல.ரூபா

| | குறிப்பு | 2014 | 2013 | மதிப்பீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| **சொத்துகள் நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 1 | 2,981,759.97 | 1,378,053.62 | 2,827,468.36 |
| பெறுவனவுகள் | 2 | 281,607.05 | 250,561.50 | 282,932.82 |
| கையிருப்புகள் | 3 | 447,930.23 | 337,705.74 | 400,000.00 |
| முற்கொடுப்பனவுகள் | 4 | 165,183.29 | 129,860.00 | 150,000.00 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 5 | 1,516,677.46 | 1,225,421.67 | 1,520,000.00 |
| | | **5,393,158.00** | **3,321,602.53** | **5,180,401.18** |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| உட்கட்டமைப்பு, பொறி மற்றும் உபகரணங்கள் | 6 | 7,266,852.17 | 6,716,617.92 | 7,000,000.00 |
| வாகனங்கள் | 6 | 7,285,479.45 | 10,735,479.45 | 7,000,000.00 |
| ஏனைய சொத்துக்கள் | 6 | 730,003.75 | 177,676.42 | 700,000.00 |
| | | 15,282,335.37 | 17,629,773.79 | 14,700,000.00 |
| **மொத்தச் சொத்துகள்** | | **20,675,493.37** | **20,951,376.32** | **19,880,401.18** |
| **பொறுப்புகள் நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| கொடுப்பனவுகள் | 7 | 383,959.20 | 1,469,607.37 | 306,208.36 |
| குறுகிய கால ஏற்பாடுகள் | 8 | 237,742.82 | 241,162.82 | 241,162.82 |
| **நடைமுறையல்லா பொறுப்புகள** | | **621,702.02** | **1,710,770.19** | **547,371.18** |

| | | | | |
|---|---|---|---|---|
| ஊழியர் நன்மைகள் | 9 | 1,592,855.75 | 1,160,263.00 | 1,500,000.00 |
| | | **1,592,855.75** | **1,160,263.00** | **1,500,000.00** |
| **மொத்தப் பொறுப்புகள்** | | **2,214,557.77** | **2,871,033.19** | **2,047,371.18** |
| **தேறிய சொத்துக்கள்** | | **18,460,935.60** | **18,080,343.13** | **17,833,030.00** |
| **தேறிய சொத்துக்கள்/ உரிமைப் பங்குகள்** | | | | |
| **<u>மூலதனம் வழங்கப்பட்டது</u>** | | | | |
| பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் | | 3,000,000.00 | 3,000,000.00 | 3,000,000.00 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | | 1,808,200.00 | 1,833,030.00 | 1,833,030.00 |
| அரச நன்கொடைகள் - மூலதனம் | | 16,776,387.93 | 17,583,167.18 | 16,000,000.00 |
| திரட்டப்பட்ட மிகை/(பற்றாக்குறை) | | (3,123,652.33) | (4,335,854.05) | (3,000,000.00) |
| **மொத்த தேறிய சொத்துகள் /உரிமைப் பங்குகள்** | | **18,460,935.60** | **18,080,343.13** | **17,833,030.00** |

மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரச துறைக்கான நிதியியல் நியமங்களுடன் இணங்குகின்றது என சான்றுபடுத்துகின்றேன்.

யு.எஸ்.டி விதானகே
உதவிப் பணிப்பாளர்
(நிதி)

திகதி:

புக்கம் 5 இருந்து 13 வரை குறிப்பிடப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றின் ஒரு பகுதியாகும். இதற்கு சபை பணிப்பாளர்கள் பொறுப்பாளர்கள்.

மல்காந்தி ஜயவர்தன
சபையின் அங்கத்தவர்
திகதி :

பேரசிரியர். லக்ஷ்மன் ஜயதிலக்க
சபையின் அங்கத்தவர்
திகதி :

## 7. 2014 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

இல.ரூபா

| | குறிப்பு | 2014 | 2013 | மதிப்பீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| அரச மானியம் -மீண்டுவரும் | 10 | 18,134,114.54 | 13,780,000.00 | 18,500,000.00 |
| அரச மானியம் - மூலதனம் | 11 | 16,840,222.46 | 11,595,548.22 | 17,500,000.00 |
| ஏனைய நன்கொடைகள் | 12 | 604,764.07 | - | - |
| சொத்து அகற்றல் வருமானம் | 13 | 1,346.44 | 13,085.00 | - |
| ஏனைய வருமானம் | 14 | 279,061.74 | 67,516.85 | 227,055.97 |
| **மொத்த வருமானம்** | | **35,859,509.25** | **25,456,150.07** | **36,227,055.97** |
| **செலவுகள்** | | | | |
| கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள் | 15 | 12,915,337.81 | 9,325,037.70 | 12,308,000.00 |
| முானியங்கள் மற்றும் ஏனைய பரிமாற்றல் கொடுப்பனவுகள் | 16 | 12,273,441.07 | 7,334,149.51 | 12,550,000.00 |
| வழங்கல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுகள் | 17 | 268,558.17 | 342,636.52 | 280,000.00 |
| தேய்வு மற்றும் தவணை முறைக் கடன் கரைப்பு | 6 | 4,927,597.71 | 4,318,600.74 | 5,500,000.00 |
| பயணம், பிழைப்பூதியம், கொடுப்பனவுகள் | 18 | 264,326.50 | 308,720.00 | 270,000.00 |
| பயன் மற்றும் சேவைகள் | 19 | 2,456,180.57 | 2,024,806.00 | 2,393,500.00 |
| பராமரிப்பு செலவுகள் | 20 | 1,285,975.10 | 1,154,670.58 | 1,115,000.00 |
| ஏனைய செலவுகள் | 21 | 280,990.70 | 354,867.57 | 411,000.00 |
| **மொத்தச் செலவுகள்** | | **34,672,407.63** | **25,163,488.62** | **34,827,500.00** |
| **மிகை/(பற்றாக்குறை)** | | **1,187,101.62** | **292,661.45** | **1,399,555.97** |

## 8. 2014 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று

### இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை

இல.ரூபா

| கட்டுப்படுத்தும் நிறுவனத்தின் உரிமையாளர்களின் பண்புக்குணகம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் | தீர்மானிக்கப்பட்ட ஒதுக்கு | அரச மானியம் - மூலதனம் | திரட்டிய மிகை/ (பற்றாக்குறை) | மொத்த தேறிய சொத்து/ உரிமைப்பங்கு |
| 31 ஜனவரி 2013ம் திகதி மீதி மு/கொ | 3,000,000.00 | 1,833,030.00 | 20,898,715.40 | (4,726,793.82) | 21,004,951.58 |
| முன்வருட சீராக்கல் | - | - | - | 98,278.32 | 98,278.32 |
| சொத்து புதுப்பித்தல் இழப்பு | - | - | 985,926.52 | - | 985,926.52 |
| தேறிய சொத்து /பங்கு உரிமைப் பற்றாக்குறை/ மிகை என்பவற்றில் இக்காலப்பகுதியில் நேரடியாக அடையாளம் காணப்பட்ட தேறிய வருமானம் | - | - | (4,301,474.74) | - | (4,301,474.74) |
| இக்காலப் பகுதியின் பற்றாக்குறை | - | - | | 292,661.45 | 292,661.45 |
| இக்காலப் பகுதியின் அடையாளம் காணப்பட்ட மொத்த வருமானம் மற்றும் செலவு | - | - | (3,315,548.22) | 390,939.77 | (2,924,608.45) |
| **முன் கொண்டுவரப்பட்ட 31 டிசம்பர் 2013 திகதியில் மீதி** | **3,000,000.00** | **1,833,030.00** | **17,583,167.18** | **(4,335,854.05)** | **18,080,343.13** |
| 31 டிசம்பர் 2013 மீதி, மு/கொ | 3,000,000.00 | 1,833,030.00 | 17,583,167.18 | (4,335,854.05) | 18,080,343.13 |
| முன்வருட சீராக்கல் | - | (24,830.00) | - | 24,830.00 | - |
| தேறிய சொத்து /பங்கு உரிமைப் பற்றாக்குறை/ மிகை என்பவற்றில் இக்காலப்பகுகியில் நேரடியாக அடையாளம் காணப்பட்ட தேறிய வருமானம் | - | - | - | - | - |
| 31 டிசம்பர் 2013 மீதி, மு/கொ | - | - | 4,108,088.46 | 270.10 | 4,108,358.56 |
| பெயரளவிலான தேய்மானம் | - | - | (4,914,867.71) | - | (4,914,867.71) |
| இக்காலப்பகுதியின் மிகை/பற்றாக்குறை | - | - | - | 1,187,101.62 | 1,187,101.62 |
| இக்காலப் பகுதியின் அடையாளம் காணப்பட்ட மொத்த வருமானம் மற்றும் செலவு | - | (24,830.00) | (806,779.25) | 1,212,201.72 | 380,592.47 |
| **முன் கொண்டுவரப்பட்ட 31 டிசம்பர் 2014 திகதியில் மீதி** | **3,000,000.00** | **1,808,200.00** | **16,776,387.93** | **(3,123,652.33)** | **18,460,935.60** |

## 9. 31 டிசம்பர் 2014ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றுதிரட்டிய காசுப் பாச்சல் கூற்று

இல.ரூபா

| | 2014 | 2013 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாச்சல்** | | |
| மிகை/(பற்றாக்குறை) | 1,187,101.62 | 292,661.45 |
| **காசு அற்ற அசைவுகள்** | | |
| பெறுமானத் தேய்வு | 4,927,597.71 | 4,318,600.74 |
| பணிக்கொடை | 930,305.50 | 181.208.60 |
| முன்னைய வருட சீராக்கல் | - | 98,278.32 |
| பெயரளவான தேய்வு வருமானம் | (4,914,867.71) | (4,301,474.74) |
| நிலையான சொத்துக்களில் இருந்து மூலதன வருமானம் | (4,557.75) | - |
| ஊழியக் கடன் வட்டி | (57,055.97) | (50,816.85) |
| கணக்காய்வுக் கட்டணம் | 78,160.00 | 79,289.00 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனை மூலமான (உழைப்புகள்)/நட்டங்கள் | (1,346.44) | (13,085.00) |
| நுகர்வுக் களஞ்சிய அதிகரிப்புகள் (குறைவுகள்) | (110,224.49) | (247,574.29) |
| முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்புகள் (குறைவுகள்) | (35,323.29) | (129,860.00) |
| ஊழியர் கடன அதிகரிப்புகள் (குறைவுகள்) | (302,255.79) | 94,753.42 |
| ஏனைய முற்கொடுப்பனவு அதிகரிப்புகள் (குறைவுகள்) | 20,000.00 | 5,939.50 |
| கொடுப்பனவு அதிகரிப்புகள் (குறைவுகள்) | (1,085,648.17) | 1,088,738.63 |
| குறுகிய கால ஏற்பாடுகளில் அதிகரிப்புகள் (குறைவுகள்) | - | 71,162.82 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்புகள் | (9,000.00) | 1,000.00 |
| பெறுவனவுகளில் அதிகரிப்புகள் | (31,045.55) | (248,791.50) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் | (81,580.00) | (79,289.00) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | (497,712.75) | - |
| அரச மானியம | 4,108,088.46 | 985,926.52 |

.

| | | |
|---|---:|---:|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாச்சல்** | **4,120,634.98** | **2,146,667.62** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாச்சல** | | |
| தளபாட மற்றுத் பொருத்திகள் கொள்வனவு | (139,495.60) | (486,947.00) |
| அலுவலக உபகரணக் கொள்வனவு | (622,261.00) | (854,636.00) |
| மின்சார பொருத்திகள் கொள்வனவு | (13,899.00) | - |
| கணணிக் கொள்வனவு | (1,204,700.00) | (2,093,262.38) |
| வாகனக் கொள்வனவு | - | - |
| ஊழியர் கடன் மீதான வட்டி | 57,055.97 | 50,816.85 |
| மென்பொருள் செலவு | (6,000.00) | (770,556.61) |
| புத்தகக் செலவு | (4,250.00) | (380.00) |
| ஏனைய சொத்துக் கொள்வனவு | (601,339.00) | - |
| பொறி மற்றும் உபகரண விற்பனையில் இருந்தான வருமானம் | 17,960.00 | 13,085.00 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாச்சல்** | **(2,516,928.63)** | **(4,141,880.14)** |
| நிதிச் செயற்பாடுகளில் இருந்தான காசுப்பாச்சல் | - | - |
| நிதி நடவடிக்கைகயில் இருந்தான தேறிய காசுப் பாச்சல் | - | - |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் அதிகரிப்பு / (குறைவு) | 1,603,706.35 | (1,995,212.52) |
| இக்காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | 1,378,053.62 | 3,373,266.14 |
| இக்காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | **2,981,759.97** | **1,378,053.62** |

**காசுப் பாச்சல் கூற்றின் குறிப்புகள்**

கையில் உள்ள காசு மற்றும் வங்கி மீதி

| | | |
|---|---:|---:|
| மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 119100120409161 | 1,001,931.27 | 1,283,060.26 |
| இலங்கை வங்கிக் கணக்கு 165197 | 1,979,828.70 | 94,993.36 |
| | **2,981,759.97** | **1,378,053.62** |

## 10. குறிப்புகள்

| | குறிப்புகள் | 2014 | 2013 | Budgeted |
|---|---|---|---|---|
| **காசு மற்றும் காசுக்கு சமமானவை** | **1** | | | |
| மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 119100120409161 | | 1,001,931.27 | 1,283,060.26 | 1,000,000.00 |
| இலங்கை வங்கிக் கணக்கு 165197 | | 1,979,828.70 | 94,993.36 | 1,827,468.36 |
| | | **2,981,759.97** | **1,378,053.62** | **2,827,468.36** |
| **பெறுகைகள்** | **2** | | | |
| வரை.தேசிய கடதாசி நிறுவனம் | | 1,770.00 | 1,770.00 | 1,770.00 |
| தேசிய மீன்பிடி மற்றும் கடல் பொறியியல் நிறுவனம் | | 208,674.23 | 110,284.63 | 210,000.00 |
| இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு | | - | 67,344.05 | - |
| நிமல் போப்பகே (முன்னாள் தலைவர்) | | 71,162.82 | 71,162.82 | 71,162.82 |
| | | **281,607.05** | **250,561.50** | **282,932.82** |
| **கையிருப்பு** | **3** | | | |
| நுகர்வுக் களஞ்சியம் | | 447,930.23 | 337,705.74 | 400,000.00 |
| | | **447,930.23** | **337,705.74** | **400,000.00** |
| **முற்கொடுப்பனவுகள்** | **4** | | | |
| வாகனக் காப்புறுதி | | 165,183.29 | 129,860.00 | 150,000.00 |
| | | **165,183.29** | **129,860.00** | **150,000.00** |
| **ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | **5** | | | |
| ஏனைய முற்பணங்கள் | | - | 20,000.00 | - |
| ஊழியர் கடன் - இடர் | | 1,498,677.46 | 1,196,421.67 | 1,500,000.00 |
| விழாக்கால முற்பணம் | | 18,000.00 | 9,000.00 | 20,000.00 |
| | | **1,516,677.46** | **1,225,421.67** | **1,520,000.00** |

# ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (குறிப்பு 06)

| | தளபாடங்கள் மறறும் பொறுத்திகள் | | அலுவலக உபகரணங்கள் | | மின்சார பொறுத்திகள் மற்றும் உபகரணங்கள் | | கணணிகள் | | மென்பொருள் | | வாகனங்கள் | | புத்தகங்கள் | | ஏனைய சொத்துகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **அறிக்கையிடும் காலம் 01.01.2014 to 31.12.2014** | **2014** | **2013** | **2014** | **2013** | **2014** | **2013** | **2014** | **2013** | **2014** | **2013** | **2014** | **2013** | **2014** | **2013** | **2014** | **2013** |
| ஆரம்ப மீதி | 1,818,342.34 | 1,331,395.34 | 2,278,209.95 | 1,423,573.95 | 57,656.25 | 57,656.25 | 4,420,588.13 | 2,327,325.75 | 770,556.61 | - | 18,950,000.00 | 18,950,000.00 | 80,097.15 | 79,717.15 | 413,865.50 | 413,865.50 |
| சேர்த்தல் | 139,495.60 | 486,947.00 | 622,261.00 | 854,636.00 | 13,899.00 | - | 1,204,700.00 | 2,093,262.38 | 6,000.00 | 770,556.61 | - | - | 4,250.00 | 380.00 | 601,339.00 | - |
| சீராக்கல் | 28,010.00 | 58606.00 | 3,000.00 | - | - | - | - | 93,100.00 | - | - | - | - | - | - | - | - |
| இல்லாதாக்கல் | (40,210.00) | (58,606.00) | (99,978.75) | - | - | - | (8,630.00) | (93,100.00) | - | - | - | - | - | - | - | - |
| **முடிவுறுத்தல் மீதி** | 1,945,637.94 | 1,818,342.34 | 2,803,492.20 | 2,278,209.95 | 71,555.25 | 57,656.25 | 5,616,658.13 | 4,420,588.13 | 776,556.61 | 770,556.61 | 18,950,000.00 | 18,950,000.00 | 84,347.15 | 80,097.15 | 1,015,204.50 | 413,865.50 |
| சேர்க்கப்படட தேய்மானம் (வருட ஆரம்பத்தில்) | 396,348.29 | 238,498.15 | 470,306.99 | 326,573.19 | 20,177.65 | 17,457.65 | 1,730,043.30 | 1,202,187.02 | 11,859.13 | - | 8,214,520.55 | 4,764,520.55 | 74,047.75 | 73,469.36 | 242,238.48 | 218,235.48 |
| சீராக்கல் | 25,170.12 | 58,606.00 | - | - | - | | - | 93,100.00 | - | - | - | - | - | - | - | - |
| தேய்மானம் ( நிதிச் செயலாற்றுகை கூற்றுக்கு அமைவாக) | 187,763.95 | 157,850.14 | 253,002.55 | 143,733.80 | 7,531.12 | 2,720.00 | 782,616.39 | 527,856.28 | 193,422.03 | 11,859.13 | 3,450,000.00 | 3,450,000.00 | 596.30 | 578.39 | 52,665.37 | - |
| <u>கழி – சொத்து செலவிடப்படட சேர்க்கப்பட்ட தேய்மானம்</u> | (28,674.95) | (58,606.00) | (96,959.74) | - | - | - | (5,558.87) | (93,100.00) | - | - | - | - | - | - | - | - |
| **முடிவுறுத்தல் மீதி** | 580,607.41 | 396,348.29 | 626,349.80 | 470,306.99 | 27,708.77 | 20,177.65 | 2,507,100.82 | 1,730,043.30 | 205,281.16 | 11,859.13 | 11,664,520.55 | 8,214,520.55 | 74,644.05 | 74,047.75 | 294,903.85 | 242,238.48 |
| **தேறிய கொண்டுசெல் லல் தொகை** | 1,365,030.53 | 1,421,994.05 | 2,177,142.40 | 1,807,902.96 | 43,846.48 | 37,478.60 | 3,109,557.31 | 2,690,544.83 | 571,275.45 | 758,697.48 | 7,285,479.45 | 10,735,479.45 | 9,703.10 | 6,049.40 | 720,300.65 | 171,627.02 |

| கொடுப்பனவுகள் 7 | | | |
|---|---|---|---|
| அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் | - | 89,074.00 | - |
| மெற்றோபொலிடன் காரியாலம் | - | 260,000.00 | - |
| MS டெக்னோலோஜிஸ் | - | 739,556.61 | - |
| IWSS சேர்வே செலவு | 4,580.57 | 4,580.57 | 4,580.57 |
| NVQ சான்றிதழ் உரிமையாளர்கள் - காலி | 19,000.00 | 19,000.00 | 19,000.00 |
| NVQ சான்றிதழ் உரிமையாளர்கள் - பெலியத்த | 6,000.00 | 6,000.00 | 6,000.00 |
| CADREP | - | 48,097.63 | 48,097.63 |
| சம்பளம் மற்றும் கூலி – NIFNI | 63,390.48 | 53,435.53 | 21,130.16 |
| தொலைபேசி | 11,472.19 | 20,562.50 | 20,000.00 |
| இணையம் | 11,123.58 | 1,096.73 | 8,000.00 |
| பத்திரிகை பில் | 1,820.00 | 2,440.00 | 2,400.00 |
| துப்பரவு மற்றும் பாதுகாப்பு | 125,356.47 | 82,562.33 | 90,000.00 |
| உள்நாட்டுப் பயணச் செலவு | 6,737.50 | 350.00 | 7,000.00 |
| தடய கிருள செலவு | - | 2,463.00 | - |
| தரவுத்தளத்தை நிறுவுவதற்கான செலவு | - | 400.00 | - |
| ஏனைய சேவைகளுக்கான செலவு | 1,996.80 | 16,660.50 | - |
| வாகனத் திருத்தம் மற்றும் பராமரிப்பு, | - | 12,425.00 | - |
| ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி | - | 27,000.00 | - |
| தற்காலிக சம்பளம் | 30,396.32 | 39,421.56 | 30,000.00 |
| மேலதிக நேரக் செலவு | 36,570.17 | 11,552.00 | 40,000.00 |
| விடுமுறைக் கொடுப்பனவு | 7,440.50 | - | 10,000.00 |
| மின்சாரம் செலுத்த வேண்டியது | 53,615.52 | - | - |
| தண்ணீர் செலுத்த வேண்டியது | 3,459.10 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| கிளிநொச்சி ஆய்வுக் செலவு | | 1,000.00 | 32,929.41 | - |
| | | **383,959.20** | **1,469,607.37** | **306,208.36** |
| **<u>குறுகிய கால ஏற்பாடுகள்</u>** | **8** | | | |
| கணக்காய்வுக் கட்டணம் - 2012 | | - | 85,000.00 | - |
| கணக்காய்வுக் கட்டணம் – 2013 | | 85,000.00 | 85,000.00 | 85,000.00 |
| கணக்காய்வுக் கட்டணம் – 2014 | | 81,580.00 | - | 85,000.00 |
| ஐயக்கடன் ஏற்பாடு – நிமல் போபகே | | 71,162.82 | 71,162.82 | 71,162.82 |
| | | **237,742.82** | **241,162.82** | **241,162.82** |
| **<u>ஊழியர் நன்மைகள்</u>** | **9** | | | |
| பணிக்கால கொடுப்பனவு ஏற்பாடு | | 1,592,855.75 | 1,160,263.00 | 1,500,000.00 |
| | | **1,592,855.75** | **1,160,263.00** | **1,500,000.00** |
| **அரச மானியம் - மீண்டுவரும்** | 10 | **18,134,114.54** | **13,780,000.00** | **18,500,000.00** |
| **<u>அரச மானிணம் - மூலதனம்</u>** | 11 | | | |
| அரச மானிணம் - மூலதனம் | | 11,920,797.00 | 7,294,073.48 | 12,000,000.00 |
| பெயரளவான தேய்மான வருமானம் | | 4,914,867.71 | 4,301,474.74 | 5,500,000.00 |
| அரச மானிணம் - மூலதனம் | | 4,557.75 | - | - |
| | | **16,840,222.46** | **11,595,548.22** | **17,500,000.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| **ஏனைய நன்கொடைகள்** | 12 | | | |
| அமைச்சின் நன்கொடை | | 499,804.07 | - | - |
| Stromme | | 104,960.00 | - | - |
| | | **604,764.07** | - | - |
| **சொத்து அகற்றல் வருமானம்** | 13 | **1,346.44** | **13,085.00** | - |
| **ஏனைய வருமானம்** | 14 | | | |
| நானாவித வருமானம் | | 173,908.14 | 16,700.00 | 170,000.00 |
| இடர் கடன் வட்டி | | 57,055.97 | 50,816.85 | 57,055.97 |
| CADREP | | 48,097.63 | - | - |
| | | **279,061.74** | **67,516.85** | **227,055.97** |
| **கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள்** | 15 | | | |
| சம்பளம் மற்றும் கூலி | | 6,040,218.22 | 4,815,399.69 | 6,000,000.00 |
| பதில் கடமை சம்பளம் | | 77,692.80 | 20,524.98 | 78,000.00 |
| விசேட கொடுப்பனவு | | 1,101,577.04 | 723,276.32 | 1,100,000.00 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | | 2,387,795.67 | 1,601,947.75 | 2,400,000.00 |
| இடைக்காலக் கொடுப்பனவு | | 150,000.00 | - | - |
| போக்குவரத்துக் கொடுப்பனவு | | 166,677.42 | 180,000.00 | 180,000.00 |
| எரிபொருள் கொடுப்பனவு | | 340,006.45 | 334,000.00 | 340,000.00 |
| ஊ.சே.நி | | 1,096,756.05 | 785,139.39 | 720,000.00 |
| ஊ.ந.நி | | 274,189.45 | 196,285.03 | 180,000.00 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | | 132,582.86 | 107,184.88 | 135,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| விடுமுறைக் கொடுப்பனவு | | 23,388.75 | 16,739.50 | 25,000.00 |
| தற்காலிக சம்பளம் | | 194,147.60 | 363,331.56 | 200,000.00 |
| பணிக்கொடைச் செலவுகள் | | 930,305.50 | 181,208.60 | 950,000.00 |
| | | **12,915,337.81** | **9,325,037.70** | **12,308,000.00** |
| **மானியங்கள் மற்றும் ஏனைய மாற்றல் கொடுப்பனவுகள்** | 16 | | | |
| பொது தொழில் வழிகாட்டல் முறைமையை அபிவிருத்தி செய்தல் | | - | 532,275.00 | - |
| கிளிநொச்சி ஆய்வு | | - | 1,473,061.05 | - |
| மனிதவள நிகழ்ச்சித்திட்டம் | | - | 492,567.00 | - |
| செய்தித்தாள் | | 169,810.52 | 65,500.00 | 170,000.00 |
| தயட கிருள கண்காட்சி | | 762,508.68 | 1,347,567.38 | 800,000.00 |
| ஊழியச் சந்தை கற்கை | | 4,000,479.50 | 250,657.75 | 4,000,000.00 |
| தரவுத் தளத்தை நிறுவுதல் | | - | 824,663.16 | - |
| பட்டதாரி பயிலுனர் கற்கை | | - | 437,978.46 | - |
| தொழில் வழிகாட்டல் | | - | 1,810,879.71 | - |
| ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி | | 722,527.18 | 99,000.00 | 800,000.00 |
| மத்தியகிழக்கு நாடுகளுக்கான இடம்பெயர்வு | | 350,794.40 | - | 350,000.00 |
| மாத்தறை மாவட்ட ஆய்வு | | 499,804.07 | - | 500,000.00 |
| செயற்திறனை அதிகரிப்பதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல் | | 29,437.37 | - | 30,000.00 |
| முன்னேற்றமடையாத குடும்பங்களுக்கான கற்கை | | 1,455,638.27 | - | 1,500,000.00 |
| முழுமையான அணுகல் கற்கை | | 866,720.24 | - | 900,000.00 |
| NHRDC.gov. lk | | 589,650.07 | - | 600,000.00 |
| கிளிநொச்சிக் கற்கை – பீபீபீ அணுகுமுறை | | 1,510,095.43 | - | 1,500,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| ISO சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் | | 1,144,236.94 | - | 1,200,000.00 |
| கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | | 171,738.40 | | 200,000.00 |
| | | **12,273,441.07** | **7,334,149.51** | **12,550,000.00** |
| **வழங்கல்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுகள்** | 17 | | | |
| எழுது கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | | 96,838.17 | 107,726.52 | 100,000.00 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | | 171,720.00 | 207,260.00 | 180,000.00 |
| சீருடை | | - | 27,650.00 | - |
| | | **268,558.17** | **342,636.52** | **280,000.00** |
| **தேய்மானம் மற்றும் தவணை முறைக் கடன் கரைப்பு** | 6 | **4,927,597.71** | **4,318,600.74** | **5,500,000.00** |
| **பயணச் செலவு, பிழைப்பூதியம் மற்றும் கொடுப்பனவு** | 18 | | | |
| உள்நாட்டு பயணச் செலவு மற்றும் பிழைப்பூதியம் | | 13,526.50 | 37,520.00 | 15,000.00 |
| கணக்காய்வு அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 66,400.00 | 84,400.00 | 70,000.00 |
| சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 184,400.00 | 186,800.00 | 185,000.00 |
| | | **264,326.50** | **308,720.00** | **270,000.00** |
| **பயன் மற்றும் சேவைகள்** | 19 | | | |
| சோலைவரி (Rates) | | 40,320.00 | 39,199.97 | 40,000.00 |
| மின்சாரம் | | 727,630.33 | 579,465.92 | 750,000.00 |
| தண்ணீர் | | 41,320.09 | 31,839.73 | 40,000.00 |
| தொலைபேசிக் கட்டணம் மற்றும் வாடகை | | 176,392.67 | 171,843.68 | 180,000.00 |
| தபால் மற்றும் டெலெக்ஸ் கட்டணம் | | 14,425.00 | 24,400.00 | 15,000.00 |
| சுத்திகரிப்புச் சேவை | | 386,768.66 | 206,146.21 | 400,000.00 |
| விளம்பரம் | | 37,094.40 | 103,084.80 | 40,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| பாதுகாப்பு சேவை | | 804,750.00 | 518,010.00 | 800,000.00 |
| இணையம் | | 104,680.42 | 78,949.86 | 100,000.00 |
| ஆலோநனை | | 10,500.00 | - | 10,500.00 |
| ஏனைய பயன் மற்றும் ஏனைய சேவைகள் | | 112,299.00 | 271,865.83 | 18,000.00 |
| | | **2,456,180.57** | **2,024,806.00** | **2,393,500.00** |
| **பராமரிப்புச் செலவுகள்** | 20 | | | |
| கட்டடம் மற்றும் கட்டமைப்புத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | | | |
| பொறி மற்றும் இயந்திரத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 181,611.90 | 251,557.32 | 200,000.00 |
| வாகனத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 739,786.70 | 439,877.56 | 550,000.00 |
| வாகனக் காப்புறுதி | | 307,844.00 | 196,177.30 | 300,000.00 |
| அலுவலக உபகரணத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 53,552.50 | 192,727.60 | 50,000.00 |
| கணணித் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | - | 61,944.80 | - |
| மின்சார உபகரணங்கள் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | - | 12,386.00 | 10,000.00 |
| ஏனைய சொத்துக்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 3,180.00 | - | 5,000.00 |
| | | **1,285,975.10** | **1,154,670.58** | **1,115,000.00** |
| **ஏனைய செலவுகள்** | 21 | | | |
| கணக்காய்வுக் கட்டணம் | | 78,160.00 | 79,289.00 | 80,000.00 |
| செய்தித்தாள் | | 16,940.00 | 14,000.00 | 14,000.00 |
| ஊழியர் நலன்புரி | | 11,750.00 | 43,101.00 | 12,000.00 |
| மருத்துவச் செலவுகள் | | 4,999.00 | - | 5,000.00 |
| ஏனைய சேவைச் செலவுகள் | | 76,217.70 | 39,659.75 | 200,000.00 |
| புத்துணர்வு | | 92,924.00 | 107,655.00 | 100,000.00 |
| ஐயக் கடன் - நிமல் போபாகே | | - | 71,162.82 | - |
| | | **280,990.70** | **354,867.57** | **411,000.00** |

## 11.குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் ருக்கம், விளக்கக் குறிப்புகள்

**1.** இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்கு மனித வள அபிவிருத்திக்கு அவசியமான அனைத்து மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சாட்டப்பட்டுள்ளது.

**2. கணக்குகளை விளக்கல் மற்றும் நிதியில் கூற்றுகளை வழங்குவதற்கான அதிகாரம்**

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை பொதுக் கூட்டுத்தாபனமாக இருப்பதனால், நிறுவனத்தின் நிதியாண்டு முடிவடைந்தவுடன் உடனடியாக, நிறுவனத்தின் அதிகாரத்திற்காக அவ்வருடத்தில் அதன் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வருடாந்த அறிக்கையின் முன்வரைபினை தயாரித்தல் வேண்டும். இந்த அறிக்கை, அக்காலப்பகுதியில் உரிய அமைச்சரினால் வழங்கப்பட்ட யாதேனும் வழிகாட்டல்களைக் கொண்டிருக்கும். இந்த அறிக்கைகளின் பிரதிகளை, வருடம் முடிவடைந்த நான்கு மாதங்களின் பின்னர், உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் (அவர் உரிய அமைச்சராக இல்லாத பட்சத்தில்), திட்டமிடல் அமைச்சர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல் வேண்டும்.

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, ஒவ்வொரு நிதியாண்டும், கணக்காய்வாளர் நாயகம் யாதேனும் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்குமாறு கோரப்படின் அவ்வடிவத்தில், ஒவ்வொரு நிதியாண்டும் நிதியாண்டு முடிவடைந்து நான்கு மாதங்களின் பின்னர் நிறுவனத்தின் கணக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு நிறுவனமும் இந்த உப பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைவாக அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தவறின் இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததாகக் கருதப்படுவதுடன், மஜிஸ்ரேட்டின் முன்னர் நம்பிக்கைகைய இழந்தால், ரூபா ஆயிரத்திற்கு குறைவில்லாத தண்டப்பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**3. இணக்கக் கூற்று**

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் கணக்கீட்டு முறை, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரச சேவை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றது.

**4. அளவீட்டு அடிப்படை**

சபையின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரய அடிப்படையில், குறிப்பிட்ட தளபாடம் மற்றும் பொருத்திகள், அலுவலக உபகரணங்கள், மினசார பொருத்திகள் மற்றும் உபகரணங்கள், கணனிகள், வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தவிர்த்து 2008 மற்றும் 2011ம் ஆண்டில்

இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் கீழ் தயாரிக்கப்படுகின்றது.

**5. சொத்துத்து மதிப்பீட்டுக்கான அடிப்படை**

**5.1** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவை குறைந்து செல்லும் தேய்மானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பிடப்படுகின்றது.

**5.2** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு தேய்மானம் அறவிடப்பட்டு மதிப்பிடப்பட்ட பயன்படுத்தல் காலத்தின் பின்னர் பதிவழிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**5.3** 2009ம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவைகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுக்கு தேய்மானம் வழங்கப்படுவதில்லை மற்றும் அவை அககற்றப்படும் பொழுது முழு ஆண்டுக்கான தேய்மானம் வழங்கப்பட்டது மற்றும் 2009ம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட / அகற்றப்பட்ட திகதியின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

**5.4** நுகர்வுக் களஞ்சியம் குறைந்த ஆகுசெலவு மற்றும் தேறிய சாத்தியமான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது.

**6. தேய்மானம்**

சொத்துக்களின் வகை மற்றும் தேய்மான வீதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தன்மை மற்றும் அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டள்ளது.

| | |
|---|---|
| கட்டடம் மற்றும் கட்டமைப்பு | 2.5% |
| தளபாடம் மற்றும் பொருத்திகள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| மினசாரப் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 20% |
| கணணிகள் | 20% |
| கணணி மென்பொருள் | 25% |
| வாகனங்கள் | 20% |
| புத்தகங்கள் | 10% |
| ஏனைய சொத்தக்கள் | 10% |

**7. ஒப்பீட்டு இலக்கங்கள்**

கடந்த நிதியாண்டின் இலக்கங்கள் மீண்டும் வகைப்படுத்தப்பட்டு மற்றும் சீராக்கப்பட்டு நிதிக்கூற்றுடன் ஒப்பிடத்தக்க வகையில் தயாரிக்கப்படும்.

## 8. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரான நிகழ்வுகள்

அனைத்து பொருளாக்கப்பட்ட ஐந்தொகை நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அவசிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது அல்லது நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 9. அரச மானியத்திற்கான கணக்கீடு

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைக்கு பொதுத் திறைசேரியினால் அரசின் மூலதன மற்றும் மீண்டுவரும் மானியங்களாக கிடைக்கப் பெற்றவையின் மூலம் நிறுவனத்தின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகை மற்றும் இவ்வருடம் தேய்மானமாக அறிவிடப்பட்ட தொகை என்பவை மூலதனச் சொத்துக்களின் பயன்பாட்டுக்கால முறையியல் அடிப்படை மீதான வருமானக அடையாளம் காணப்பட்டது.

## 10. ஓய்வூதிய நன்மைச் செலவு

### 10.1 பங்களிப்பு திட்டத்தை வரையறுத்தல் – ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு தகைமை பெற்ற அனைத்து ஊழியர்களுக்குமான பங்களிப்பு உரிய பங்களிப்பு நிதியத்தின் ஊடாக உரிய விதிமுறைகளின் அமைவாக அணவல் செய்யப்பட்டது.

### 10.2 ஒய்வூதியக் பணிக்கொடை

1983ம் ஆண்டு 12ம் இலக்க ஒய்வூதிய கொடுப்பனவுச்ச் சட்டத்தின் கீழ் வரும் அனைத்து ஊழியர்களுக்குமான கொடுப்பனவுகள், இலங்கை கணக்கியல் நியம இலக்கம் 19இல் குறிப்பிடப்பட்ட 'ஊழியர் நன்மைகள்' என்பதற்கு அமைவாக நிதிக்கூற்றில் ஒய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. பணிக்கொடை பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படவில்லை அல்லது அட்டுறுவாக பெறுமதியிடப்படவில்லை.

## 11. நிதிச் செயற்பாடுகள்

சபை அதன் மூலதனச் சொத்துக்களின் தொழிற்பாடு மற்றும் பராமரித்தல் என்பவற்றின் போது வினைத்திறமையுடன் செயற்பட்டதுடன் வருமானத்தை அறவிட்டது. வருமானச் செலவுகளின் மிகை அல்லது பற்றாக்குறை, அனைத்து பொறுப்புகள் மற்றும் சொத்துக்களின் தேய்மானம் என்வற்றின் ஏற்பாடுகளின் பின்னர் ஏற்பட்டதாகும்.

## 12. காசுப் பாச்சல் கூற்று

இலங்கை அரச சேவை கணக்கியல் நியமம் 02இன் பிரிவு 27இல் குறித்துறைக்கப்பட்டவாறு நேரடியல்லா முறையில் காசுப்பாச்சல் கூற்று தயாரிக்கப்பட்டது.

## 12. கணக்காய்வு அறிக்கை மற்றும் பதில்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. } வைஎஸ்/ஈ/என்எச்ஆர்டீசீ/1/14/02 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. } | දිනය<br>திகதி<br>Date } 2015 ஆகஸ்ட் 31 |

தலைவர்,

இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை.

**இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1997 இன் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை பேரவையின் தலைவருக்கு 2014 ஏப்ரல் 08 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 29,400,950 கிரயமான சொத்துக்கள் தொடர்ந்தும் பாவனையில் உள்ள போதும், அவற்றின் நியாயப் பெறுமதியினை கணக்குகளில் காட்டுவதற்காக சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய கணக்குகளும் செலுத்த வேண்டிய கணக்குகளும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 29,580 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய 03 செலவின உருப்படிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 யூலை 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட கட்டுப்பாட்டு சபை கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம், பேரவையின் முன்னாள் தலைவரிடமிருந்து பேரவைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 71,162 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1997 இன் 18 ஆம் இலக்க மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவு | பேரவையின் கூட்டிணைப்பு, பதவிகளின் அடிப்படையில் உத்தியோகபூர்வ அதிகாரத்தில் நியமிக்கப்படுகின்ற 15 அங்கத்தவர்களையும் மற்றும் அமைச்சரினால் நியமிக்கப்படும் 5 அங்கத்தவர்களையும் கொண்டிருக்க வேண்டிய போதிலும் அமைச்சரால் 4 அங்கத்தவர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் புறம்பான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், பேரவையினால் அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | ஒவ்வொரு கணக்கு நடவடிக்கை தொடர்பிலும் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், பேரவையினால் அனைத்து நிலையான சொத்து கொள்வனவுகளும் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது பேரவையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 1,187,102 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது 292,661 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 894,441 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1997 இன் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி பேரவை அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பந்தியின் கீழ் பேரவையின் செயற்பாடு மற்றும் 06 பணிகள் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே அதன் முதலாவது பட்டோலையின் கீழ் நாட்டின் மனித வளத்தின் அபிவிருத்திக்காக நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் மற்றும் பணிகள் மேலும் விரிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் கடந்த காலப்பகுதிக்குரியதாக தயாரிக்கப்பட்ட திட்டம் உட்பட அதன் உள்ளபடியான செயற்படுதன்மை சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் விடயங்களினை பூர்த்தி செய்தல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

(அ) தேசிய மனித வளங்கள் அபிவிருத்திக் கொள்கை மற்றும் அமுலிலுள்ள திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள், முன்னர் மேற்கொண்ட மீளாய்வு, பரிசோதனைகள் மற்றும் தேவையான போது குறித்த கொள்கை, திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களுக்குரிய பரிந்துரை அமைச்சருக்கு பேரவையினால் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் அமுலாக்கல் தொடர்பில் ஆராயப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

நாட்டின் மனித வளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் மிகவும் பயனுள்ளதாகவும் செயற்திறனுள்ளதாகவும் அமுல்படுத்துவதற்கு இயலுமான வகையில் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது உப பிரிவின் பிகாரம் மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவைக்கு நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் நாட்டின் பொருளாதாரம் மற்றும் மனித வள அபிவிருத்தித் துறை மற்றும் அதனுடன் இணைந்த அனைத்து நிறுவகத் தலைவர்களும் கொண்டமைந்த 20 பேருடன் கூடிய குழுவொன்றாக இருக்க வேண்டும்.

எனினும், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தின் அறிக்கை மற்றும் கூட்டங்களில் பங்குபற்றிய அங்கத்தவர்கள் தொடர்பில் மேற்கொண்ட பரிசோதனைகளில் மேற்குறித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு பேரவை அங்கத்தவர்களின் பங்களிப்பு கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய குறைந்த மட்டத்தில் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட 06 கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்களுக்காக நியமிக்கப்பட்டிருந்த 19 அங்கத்தவர்களில் ஒரு தடவையேனும் பங்குபற்றாத அங்கத்தவர்களின் எண்ணிக்கை 07 ஆகும்.

(ஆ) நடாத்தப்பட்ட அனைத்து கூட்டத்தொடர்களிலும் தலைவர் மற்றும் இரு அங்கத்தவர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தமையும், ஒரு கூட்டத்தொடருக்கு மாத்திரம் பங்குபற்றிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை இரண்டு எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) செயல் நடிவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் சமூக அறிவு தொடர்பான செயற்திட்டத்தின் இறுதி அறிக்கை மீளாய்வாண்டில் அமைச்சருக்கு சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும், இச் செயற்திட்டம் திட்டமிடப்பட்டு 06 மாதங்கள் கடந்த நிலையில் நடைமுறைபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 0.35 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அறிக்கையானது 2015 யூன் 18 ஆம் திகதி வரையிலும் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த வரப்பிரசாதங்கள் எதுவும் கிடைக்கப்பெறாத குடும்பங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 7000 குடும்பங்கள் தொடர்பில் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, மீளாய்வாண்டில் அது தொடர்பில் ரூபா 1.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கை திட்டத்தின் பிகாரம் இச்செயற்திட்டம் மீளாய்வாண்டினுள் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், 2015 யூன் 18 ஆம் திகதி வரையிலும் அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூர் மற்றும் சர்வதேச ஊழிய சந்தை கற்கை தொடர்பிலான செயற்திட்டம் ரூபா 4 மில்லியன் செலவிடப்பட்டு தனியார் நிறுவனமொன்றின் ஊடாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்நிறுவனத்தால் ஆய்வுகள் தொடர்பில் அறிக்கையொன்று சமர்பிக்கப்பட்டிருந்ததெனினும், அவ்வறிக்கை பேரவையின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

(அ) பேரவைக்கு 2013 ஆம் ஆண்டில் 20 உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அவ் வருடத்திலேயே 03 உத்தியோகத்தர்கள் விலகிச் சென்றிருந்தனர். மீளாய்வாண்டில் 09 உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், 09 உத்தியோகத்தர்கள் விலகிச்சென்றிருந்தனர். அதன் பிரகாரம் உத்தியோகத்தர்கள் சேவையை கைவிட்டுச்செல்லும் நிலையொன்று நிலவுவதாகவும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரான 33 உத்தியோகத்தர்களில் ஐந்து பேர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாகவும், முக்கியமானதொரு பதவியான ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 04 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றுள் ஒரு பதவி வெற்றிடம் நிலவுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

## 4.5 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பேரவையின் வளங்கள்

பேரவையின் நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த சாரதியொருவரின் சேவை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வேறொரு அரச நிறுவனமொன்றின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பேரவையினால் 06 மாதங்களுக்கு ஒரு தடவை வெளியிடப்படும் நிவுஸ் லெட்டர் எனும் புதினப்பத்திரிக்கையின் யூன் மாத வெளியீட்டுக்காக 500 அலகுகளுக்கு ரூபா 43,411 செலவிடப்பட்டிருந்ததுடன் திசெம்பர் மாதத்தில் அதனை விட தடிப்பமான கடதாசியில் அச்சிடுவதற்கு ரூபா 79,236 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 35,825 தொகை அவசியமற்ற செலவினமொன்று ஏற்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் உப பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, எய்தப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்).

*Tc*

எனது இல: 3/2/23/1 13.10.2015ம் திகதி

கணக்காய்வாளர் தலைமையதிபதி,

கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்

பத்தரமுல்ல

**இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் 31 டிசம்பர் 2014ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று தொடர்பாக 1971ம் ஆண்டும் 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவுக்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

உங்களுடைய இலக்கம் எஸ்/ ஈ /என்எச்ஆர்டிசி மற்றும் 31 ஓகஸ்ட் 2015ம் திகதி உடைய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட அறிக்கை தொடர்பாக. அதற்கமைவாக எனர் தெளிவுபடுத்தலை கீழ்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

## 2.2 நிதிக்கூற்று தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

### 2.2.1 இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 07

பூஜ்ஜிய பெறுமதிக்கு கொண்டுவரப்பட்டுள்ள சொத்துக்கள் இதுவரை மீள்பெறுமதி செய்யப்பட்டுள்ளது.

## 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு

அ) உரிய செலவை 03ம் உருப்படி கணக்கில் இருந்து அகற்றுவதற்கு நிர்வாகக் குழுவின் அனுமதி கிடைத்துள்ளதுடன், 2015ம் ஆண்டு இறுதிக் கணக்கு தயாரிக்கும் பொழுது கணக்கினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ) உரிய தொகையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.4 சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

அ) சட்டத்தின் ஊடாக ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு அமைச்சரவையினால் ஐந்த அங்கத்தவர்களை நியமித்தல் தொடர்பாக அதிகாரத்தைப் பயன்படுத்துதல் எங்கள் நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட செயலாகும். எனினும் தலைவரினால் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு இது தொடர்பாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது.

ஆ) கணணி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக வேறொரு நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்படுகின்றது.

இ) நிறுவனத்தின் நிலையான சொத்தக்கள் தொடர்பாக பதிவேடொன்று பராமரிக்கப்பட்ட போதிலும், கணக்காய்வில் குறிப்பிட்டவாறு நி.பி 502(2)ற்கு அமைவாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நிறுவனத்தினால் பயன்படுத்தப்படவில்லை. அதன்படி, நி.பி.502(2)ற்கு அமைவாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றினை பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறு

ஏற்றுக்கொள்கின்றேன்.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை 2014

அ) தேசிய மனிதவள அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்துவது மேலும் காலதாமதமடையும் நிலையில் இருக்கின்றதுடன் எதிர்காலத்தில் இதனை செயற்படுத்துதலை பரிசீலனை செய்து பார்த்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதம மந்திரி காரியாலயச் செயலாளரின் இலக்கம் 408/51-2015/01 மற்றும் 03 ஜூன் 2015ம் திகதி கடிதத்தில் குறிப்பிட்டவாறு தேசிய மனிதவளக் கொள்கையை இற்றைப்படுத்தவதற்கு உரிய ஆரம்ப கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆ) மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் இந்த நோக்கத்தினை பூர்த்திசெய்வதற்கு கவனம் எடுக்கப்படாத போதிலும் இந்த நோக்கத்தை அடைவதற்கு முடிந்தது.

அதன்படி இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பிரதான நோக்த்தை மேற்கொள்வதற்கு அவசியமான கவனத்தை எடுப்பதற்கு நிறுவனத்தினுள் காணப்படும் இயலளவிற்கு ஏற்றவகையில் செயற்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்தக்கொள்கின்றேன்.

### 4.2 முகாமைத்தவ வினைத்திறனின்மை

அ) மற்றும் ஆ) இந்த நிறுவனத்தின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களில் பதினொரு (11) நபர்கள் அமைச்சரவை செயலாளர்கள், அரச நிறுவனங்கள் நான்கின் (4) தலைவர்கள் மற்றும் ஒரு பணிப்பாளர் நாயகம் என்பவர்கள் அடங்கியுள்ளனர். அதனால், பணிகள் நிறைந்த அவ்வாறான அலுவலர்கள் நிர்வாகக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதென்பதை பிரயோக ரீதியாக எதிர்பார்க்க முடியாது. எனினும் இருக்கும் நிலமையின் படி நிர்வாகக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக நிறுவனத்தின் நோக்கத்தினை பூர்த்திசெய்வதற்கு சபையின் அங்கத்தவர்கள் உச்சளவில் பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவகையில் நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் பற்றிய சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்தவதற்கு 01.10.2014ம் திகதி இலக்கம் 5-1/4/5

உடைய இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சரின் கடிதத்தின் ஊடாக உரிய திருத்தத்திற்கான சட்ட வரைவை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்ட வரைவு அனுமதியளிக்கப்பட்டதுட் உடனடியாக சட்டத்தினை திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 4.3 தொழிற்பாட்டு வினைத்திறனின்மை

அ) மத்திய கிழக்கு நாடகளுக்கு இடம்பெயர்ந்த பெண்கள் மற்றும் சமூகத்தாக்கம் தொடாபான கருத்திட்டம்

தற்போது கருத்திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவடையும் தருவாயில் இருப்பதுடன், இன்னும் இரண்டு வாரத்தினுள் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ) வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் அகதிகளாகி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களை அபிவிருத்தி செய்தல் கருத்திட்டம்.

தற்போது கருத்திட்டத் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் எதிர்வரும் மாதத்தினுள் உரிய அமைச்சுக்கு விதப்புரையை வழங்குவதற்கு சமர்ப்பிப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மனித உழைப்புச் சந்தை தொடாபான கற்கை பற்றிய கருத்திட்டம்

1997ம் ஆண்ட 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் 14(1)ம் பிரிவில் சபையின் பணிக்கு அமைவாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மனிதவள உழைப்பு சந்தை தொடாபான கற்கையை மேற்கொண்டு உரிய அமைச்சருக்கும் மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டள்ளது. அந்த அறிக்கையின் ஊடாக 2020ம் ஆண்டு வரை மனிதஉழைப்பு சந்தையில் தோன்றும் தொழில் சந்தர்ப்பங்கள் உய்தறியப்பட்டள்ளது. அதன்படி 1997ம் ஆண்ட 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் 14(1)ம் பிரிவில் குறிப்பிடப்பட்ட இலக்கு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த முடியும்.

### 4.4. பணிக்குழுவின் நிர்வாகம்

அ) மீளாய்வுக்குட்பட்ட வருடத்தினுள் சேவையில் இருந்து விலகிய 09 அலுவலர்களில் 04 அலுவலர்கள் ஒய்வூதிய பதவி கிடைத்ததனால் விலகியதுடன், மிகுதி அலுவலர்கள் தங்கள் தனிப்பட்ட குடும்பத் தேவைக்காக விலகியுள்ளனர். நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிர்வாகக்குழுவின் அனுமதி கிடைத்திருந்த போதிலும், தேர்தல் நடவடிக்கை காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதில் காலதாமதம் ஏற்பட்டது. அதன்படி இந்த வருடம் நிலவும் வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### 4.5 வேறு அரச நிறுவனங்களுக்கு சபையினால் வழங்கப்பட்ட வளங்கள்

எங்கள் நிறுவனத்திற்கு உரிய அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவனங்களில் காணப்படும் தற்காலிக சாரதி பற்றாக்குறைக்கு அவசிய தேவையை நிறைவேற்றுவதற்கு கோரப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் சாரதியொருவர் காலத்திற்கு காலம் அச்சேவைக்கு விடுவிக்கப்பட்டார். அதன்படி அரசவளத்தை உச்சளவில் பயன்படுத்தவதற்கு சந்தர்ப்பம் எழுந்திருந்தது. இதுவரை வேறெந்த நபரும் வேறு நிறுவனங்களுக்கு சேவைக்காக இணைக்கப்படவில்லை.

### 4.6 அனாவசியமான கொடுக்கல் வாங்கல்

நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் தரம் தொடர்பாக, அவற்றினை பயன்படுத்துபவருக்கு நீண்ட காலக் கற்கைக்கு அவசியமான தகவல்களை பேணுதல், நீண்ட கால கற்கை பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் வழங்கும் வகையில் விபரங்களை உள்ளடக்கி 150 GSM தடிப்புடைய டிசம்பர் மாத வெளியீடு அச்சிடப்பட்டிருந்தது. அத்துடன் டிசம்பர் மாத வெளியீடுடன் 4 பக்கங்களைக் கொண்ட அதன் திட்ட நிர்மாணிப்புக்கும் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனால் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கருத்தில்கொள்ளும் பொழுது இது எந்தவகையிலும் வீண்செலவாகாது.

## 5. <u>கணக்கீட்டு நடவடிக்கைகளின் சுபாவம் மற்றும் சிறந்த நிர்வாகம்</u>

### 5.1 <u>கூட்டிணைக்கப்பட்ட திட்டம்</u>

2014 – 2018 வரையிலான காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட திட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வொன்றினை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் குறிப்பிட்ட இலக்குகளின் நிதிப் பெறுமதியை உரிய வகையில் ஈடுப:த்துவதற்கு முடியாமல் போனதனால், அண்ணளவாக உள்ளடக்கி அதனை சீர்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## 6. முறைமை நிர்வாகம்

கணக்காய்வில் குறிப்பிட்டதற்கு அமைவாக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜி.ஜி.கசுனி உத்பலா
சபைத் தலைவர்
நிர்வாகக் குழுவிற்காக